# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ மே ௴ 8௳ [ந. 145

பிரஸங்கம் CXLV.

## மே தினத்தன்று ஸ்டாலின் சொற்பொழிவு.

---

மே தினத்தன்று உங்களுக்கு நான் ஆசி கூறுகிறேன். தேசாபிமானத்தை வெளிப்படுத்தும் இப்போரின் நடுவே நமது மக்கள் மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். இம்மக்கள் தங்கள் விதியை செஞ்சேனை நிர்ணயிக்கும் என்று அதன் மீது முழு நம்பிக்கையையும் வைத்துவிட்டனர். இதில் அவர்கள் தவறு செய்யவில்லை. ஸோவியத் படைகள் உயிரைக் கொடுத்து நாட்டைப் பாதுகாக்கின்றன. அநேகமாக இரண்டு வருஷங்களாக ஸோவியத் மக்களின் ஸ்வதந்திரத்தையும், கௌரவத்தையும் இப்படையினர் பாதுகாத்துவருகின்றனர். 1942-ம் வருஷத்தில் மழைகால போராட்டத்தில் செஞ்சேனை ஜெர்மானியப் படைக்கு பல தோல்விகளை விளைவித்தது. எதிரிகளில் பலரை நாசஞ்செய்து, தளவாடங்களுக்குச் சேதம் விளைவித்து, ஸ்டாலின்கிராடில் இரண்டு படைகளை நிர்மூலமாக்கி 3,00,000 எதிரி அதிகாரிகளை கைதுசெய்து, நூற்றுக்கணக்கான ருஷ்ய நகரங்களையும், ஆயிரக்கணக்கான கிராமங்களையும் ஜெர்மானியர் பிடியிலிருந்து விடுவித்தது.

### ஜெர்மானியர் திட்டங்கள் குலைவு.

கார்கோவ் பகுதியில் ருஷ்யத் துருப்புகளை வளைத்துக்கொண்டு ஸ்டாலின்கிராட்டை போன்ற ஓர் நிலைமையை நமக்கு அளிக்குமாறு ஜெர்மானியர்கள் நம்பியிருந்தனர். ஆனால் இந்த முயற்சி வீணாயிற்று. இச்சமயத்திலேயே லிபியாவிலும், டிரிபோலிடெனியாவிலும், இதாலிய, ஜெர்மானியத் துருப்புகளை நமது நேசத்துருப்புகள் தோற்கடித்து, எதிரிகளைத் துரத்தியடித்து டுனீஸியாவிலும் அவர்களை முறியடித்தன. ஜெர்மனியிலும், இதாலியிலும் கைத்தொழில் நிலயங்கள்மீது ஆங்கிலோ-அமெரிக்க விமானப்படைகள் பலத்த தாக்குதலை நடத்தின. இதனால் ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனை நிறுவுவதற்கான அறிகுறிகள் தெரிவிக்கப்பட்டன.

யுத்த ஆரம்பத்திலிருந்து முதல் தடவையாக கிழக்கு திசையில் நமது துருப்புகள் எதிரியைத் தாக்கினதற்குச் சமமாக மேற்கிலிருந்து நமது நேசநாடுகள் எதிரியைத் தாக்கின. இவைகளெல்லாம் ஹிட்லரின் யுத்த சாதனங்களை அடியோடு தகர்த்தன. உலக யுத்தத்தின் போக்கு மாறியது.

ஹிட்லரை முறியடிக்கும் ஏற்பாடுகள் நிறுவப்பட்டுவிட்டன. நிலைமை க்ஷீணித்துக் கொண்டுவந்ததை ஜெர்மனி ஒப்புக்கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. யுத்தத்தின் நெருக்கடியான நிலைமைபற்றி அவர்கள் கூக்குறலிட ஆரம்பித்தனர்.

ஆனால் ஹிட்லரது ஜெர்மனி ஒரு மிகவும் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது என்ற உண்மையை மறைப்பது கஷ்டம். ஒரு தீவிர தாக்குதலை துவக்குவதை ஜெர்மானியர் கைவிடும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டதனாலும், சமீபகாலமாக பாஸிஸ்ட்டு நாட்டினர் உலக அமைதி விஷயமாகப் பேசுவதினாலும் அவர்களது மனோநிலை தெளிவாகிறது.

பிரிடனும், அமெரிக்காவும் ருஷ்யாவை உதரித்தள்ளிவிட்டால், ஜெர்மானியர் இந்நாடுகளுடன் சமாதானம் செய்துகொள்ள விரும்புவர்; அல்லது ருஷ்யா பிரிடனையும், அமெரிக்காவையும் புறக்கணித்துவிட்டால் ஜெர்மனி நம்முடன் சமாதானம் கோரும்.

தங்கள் திட்டங்களைக்கொண்டே ஜெர்மன் சர்வாதிகாரிகள் நேசநாடுகளின் வலிமையை மதிப்பிட நினைக்கின்றனர். இதனால் நேசநாடுகளில் ஒன்று தன்னுடன் சேர்ந்துகொள்ளும் என்ற நம்பிக்கைபோலும். இதிலிருந்து ஜெர்மனிக்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டதென்பது தெளிவாகுகிறது. ஹிட்லரது படையை முழுதும் தோற்கடித்து நிபந்தனையின்றி ஜெர்மனி சரணாகதி செய்யும்படி செய்தால்தான் ஐரோப்பாவில் அமைதி நிலைபெறும். ஜெர்மன் இதாலிய கூட்டுக்கக்ஷி குலையும் நிலைமையிலிருக்கின்றது.

ஹிட்லரது ஜெர்மனிக்கு இன்னும் நாசம் வரவில்லை. அது இன்னும் தோற்கடிக்கப்படவில்லை.

அதோகதி வந்துவிட்டது. ஜெர்மனி குலையும் தருணம் தானாகவே வந்துவிடும் என்று நினைக்கமுடியும். இதற்காக சென்ற 5 அல்லது 6 மாதங்களில் ஏற்பட்டதுபோல், மேற்கு திசையிலிருந்தும், கிழக்கிலிருந்தும் இரண்டு, அல்லது 3 கடுமையான தாக்குதல்கள் ஏற்படவேண்டும். ஆதலின் ஸோவியத் மக்களுக்கும், செஞ்சேனைக்கும் மற்ற நேசநாடுகளுடன் கூட ஒரு தீவிர கஷ்டமான தாக்குதலைத் துவக்கவேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு பல தியாகங்களும், தைரியமும் மனோதிடமும் அவசியம். ருஷ்ய ஜனங்கள் தங்கள் பூரா ஐச்வர்யங்களையும் யுத்தத்தில் உபயோகப்படுத்தி, எதிரியை முறியடித்து உலக சமாதானத்துக்கு வழிதேடவேண்டும். செஞ்சேனைக்கு ஸோவியத் மக்கள் மிக்க கருணை காட்டுகின்றனர். 7,000 லக்ஷம் பவுன்கள் கொடுத்துதவியிருக்கின்றனர். ஊழியர்களும், விவசாயிகளும், மற்றும் பலரும் இடைவிடாமல் வேலை செய்துகொண்டிருந்தபோதிலும், ஜெர்மனியை எதிர்க்கும் போருக்கு மேலும் துப்பாக்கிகளும், விமானங்களும், யந்திர பீரங்கிகளும், டாமித் துப்பாக்கிகளும், கைத்துப்பாக்கிகளும், தளவாடங்களும், உணவும் அவசியம். இத்தகைய போரில் காலதாமதம் கூடாது. பின்வாங்குபவர்கள் தோல்வியுறுவர்.

ராணுவத் திறமையைச் சீர்படுத்துவதே தற்போது செஞ்சேனையின் முக்கிய வேலையாகும்.

அவர் இறுதியில் கூறியதாவது:—"பாஸிஸ்டு எதிரிகளின் முதுகெலும்பை, செஞ்சேனையும், நேசப்படைகளும் முறிக்கும் காலம் நெருங்கிவிட்டது".

144704

## வார யுத்தச் செய்திகள்.

### 1—5—43-லிருந்து 7—5—43-வரை.

**ருஷ்யா.**—மே மாதம் 1-ம் தேதியன்று ருஷ்யர்கள் மறுபடியும் குபான் பகுதியிலுள்ள ஜெர்மன் ஸ்தானத்தைத் தாக்கினார்கள். நோவரோஸிஸ்க்கில் எதிரி எதிர்த்தாக்குதல் 6 நாட்களாகச் செய்தும் பயன்படவில்லை. ராஸ்டாவுக்கு மேற்கிலும், பாலக்லியாவுக்கும், ஓரலுக்கும் தெற்கிலும் யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. இருதரப்பாரும் ரகசியமாக கோடை கால யுத்தத்துக்குத் தயார் செய்து வருகிறார்கள். வருங்கால யுத்தப்போக்கைப்பற்றி ஜோஸியம் சொல்லமுடியாது. இருதரப்பாரும் முன்னேறித்தாக்குவார்களென்று சொல்லலாம். ஜெர்மானியர்கள் பிரியான்ஸிலிருந்து மாஸ்கோவைக் குறித்தும், டாகன்ராக், டாமனிலிருந்து ராஸ்டாவுக்கும் முன்னேறலாம்.

**டூனிஸியா.**—டூனிஸியா முனையில் காலநிலை சரியாக இல்லை. நடவடிக்கைகள் குறைந்துவிட்டன. இருதரப்பாரும் ஓய்வு எடுத்துக்கொள்ளுகிறார்கள். பலமான சண்டைகள் நின்றுவிட்டாலும் மலைப்பிரதேசத்திலுள்ள ஜெர்மன் கோட்டைகளை நேசநாடுகள் தாக்கிவருகிறார்கள். ஜெபலிலிருந்து எதிரி விரட்டப்படுகிறான். நேசதேசப்படைகளும், அமெரிக்கர்களும், பிரெஞ்சுக்காரர்களும் மலைகளுக்கு நடுவிலுள்ள பள்ளத்தாக்குகள் வழியாக மெதுவாக முன்னேறி சில இடங்களைப் பிடித்துக்கொண்டு டூனிஸுக்கும், பிஸர்ட்டாவுக்கும் முன்னேறுகிறார்கள். ஜெபல் ஷுமாரா, ஜெபல் எஸ்டினா, ஜெபல் கெமிக், ஜெபல் கொரப்பா, கிராண்ட் டார்ஸாப், ஸித்திஆமாஸ், ஜெபல் டெர்ஹாபி, ஸித்தி அப்துல்லா முதலிய இடங்களை நமது படைகள் கைப்பற்றிவிட்டன.

மாத்தூர் விழுந்து விட்டது. மாத்தூர் வழியாகத்தான் னேஸிலிருந்து பிஸர்ட்டாவுக்குப்போகும் இருப்புப்பாதையும் ரஸ்தாவும் செல்லுகின்றன. இதை இழந்ததால் அச்சு நாடுகளின் போர்முனை சீர்கெட்டுவிட்டது. னேஸுக்கு ஆபத்து வந்துவிட்டது. பிஸர்ட்டா துண்டிக்கப்பட்டது. பிஸர்ட்டா ஏரி வழியாகச்செல்லும் மார்க்கம்தான் பாக்கியிருக்கிறது.

**பஸிபிக் யுத்தம்.**—தென் மேற்கு பஸிபிக்கில் கப்பல்களை மூழ்கடிக்கும் ஏற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. நேசநாட்டுக் கப்பல்களை ஜப்பானிய விமானங்கள் தாக்குவதுடன் ஜப்பானியர்கள் நீர்மூழ்கிகளை அதிகமாக உபயோகப்படுத்தவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

பஸிபிக்கில் நடமாடிக்கொண்டிருக்கும் அமெரிக்க நீர்மூழ்கிகள் 1,25,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை மூழ்கடித்துவிட்டன. சென்ற இரண்டு வாரங்களில் நடைபெற்ற விமானத் தாக்குதல்களில் ஜப்பானியர்கள் நேசநாடுகளைவிட எட்டு மடங்கு அதிகமாக நஷ்டமடைந்திருக்கிறார்கள். ஏப்ரல் 14 முதல் 20 தடவைகளில் நேசதேச விமானங்கள் எதிரிகளின் 90,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை மூழ்கடித்துவிட்டன.

மே மாதம் 2-ம் தேதி 51 ஜப்பானிய விமானங்கள் டார்வினைத்தாக்கிய பொழுது 13 விமானங்கள் நாசமடைந்தன. சேதம் சொல்பம்.

பஸிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் இந்த வாரத்தில் கீழ்க்கண்ட பிரதேசங்களை நேசநாடுகளின் விமானப்படை தாக்கிற்று.

**ஏப்ரல் 23.**—தாராவா (ஜில்பர்ட் தீவுகள்).
**ஏப்ரல் 24.**—ஹோல்ட்ஸ் விரிகுடாவும், ஸிகாகோ துறைமுகமும்.
**ஏப்ரல் 27.**—உபிலி, காஸ்மாடா, ஆராவே, பின்ஸ்ஷேபன், மூபோ, கிஸ்கா.
**ஏப்ரல் 28.**—வாட்டாக் (கேத்தீவுகள்), ரேபி (ஆரோத்தீவுகள்)', பேரு (டிமார் தீவு), வில்லாமஸ் (வடக்கு பிரிடன் தீவு), காஸ்மாடா, கிளஸ்டர்முனை (அராபூராக்கடலில் 4,000 டன்கள் எடைமானமுள்ள 2 சாமான் கப்பல்கள் நாசமடைந்தன,.

**மே 1.**—கெயிரங்க், காஸ்மாடா, கிஸ்கா (13 தடவை) ஹோல்ட்ஸ் விரிகுடாவும் ஸிகாகோ துறைமுகமும்.

**மே 2.**—டிமிகா (டச்சு நியூ கினியா), ராபிரே, மான்ஸ்க்வாரி, லாங்கோயர், பீமா, கிளஸ்டர்முனை, மூபோ, முண்டா.'

**சைனு.**—ஜப்பானியர்கள் யூனனுக்குத் தலைநகரமான கன்மிங்கை 240 விமானங்களால் தாக்கியதில் 10 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மற்றொரு நாள் யூனனிலுள்ள அமெரிக்க 14-வது விமானப்படை தளத்தை 45 ஜப்பானிய விமானங்கள் தாக்கியபொழுது 6 விமானங்கள் நாசமாயின. 8 விமானங்கள் பழுதுபட்டன. ஷான்ஸி—ஹோனன் எல்லையில் கடும்போர் துவங்கி விட்டது. வட சைனுவிலுள்ள சமவெளிகளுக்குப் போகும் பாதைக்குத் திறவுகோல் போன்ற டெயிஹான்ஷான் மலைச்சரிவுகளில் முக்கியமாய் யுத்தம் நடைபெறுகிறது. சீனப்படைகளை விரட்டியடிக்க ஜப்பான் இப்பொழுது 8-வது தடவை பிரயத்தனம் செய்கிறது. மேற்குச் சரிவுகளிலிருந்த ஜப்பானியப் படையில் பாதியை சீனர்கள் அழித்து விட்டார்கள்.

**பர்மா.**—மாங்டாவுக்கும், பூ தேடாங்குக்கும் வடக்கு முகமாகச் செல்ல ஜப்பானியர்கள் முயன்று வருகிறார்கள். ரோந்துப்படைகளை அனுப்புகிறார்கள். ரகசியமாக பிரிடிஷ் படைகளுக்குப்பின் புறம் செல்லவும் முயலுகிறார்கள். கடுமையான போர் சில இடங்களில் நடைபெறுகிறது. ஜப்பானியர்களுக்கு அதிக நஷ்டம் விளைந்தது. கீழ்க்கண்ட இடங்களில் நேசதேச விமானத்தாக்குதல் ஏற்பட்டன.

**ஏப்ரல் 22.**—டாவா விமான தளம்.
**ஏப்ரல் 25.**—டாவா, மெயிமியோ, யூவாடங்க்.
**ஏப்ரல் 26.**—ஆரக்கான் கடற்கரையில் 2 கிராமங்கள், ஐராவதியில் இரண்டு போக்குவரத்துப் படகுகள், தயாட்மியோக்கருகில் கட்டடங்கள், ஷ்வீபோ, ரெங்கூன், ஹேஹோ, மணிவா, காங்காங்.

**ஏப்ரல் 27.**—தாழி, பாஸின், அக்யாப், நாக்யிஸாங்க்.
**ஏப்ரல் 28.**—கான்பாலு, காதா, ஸோப்ஸூப், நானியாஸெயிக், டெகோனு, மானவெட்.
**ஏப்ரல் 29.**—வர்தொள, அக்யாப், ரெங்கூன்.
**ஏப்ரல் 30.**—மாயூ, மீஞ்சா.
**மே 1.**—மியத்தா பள்ளத்தாக்கு, மெயிபான் துறைமுகம், டாங்கப்.
**மே 2.**—அக்யாப்.

# சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**25—4—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே, தண்ணீர் போக்குவரத்துகள்—*பெல்ஜியம்* (Belgium), *பிரான்ஸ்* (France).

பூட்டும் கதவுகள்.—*பிரான்ஸிலுள்ள கலே* (Calais)*க்கு அருகில் (1 எதிரி விமானமும், 2 நேசதேச விமானங்களும் காணப்படவில்லை).*

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—*எதிரி ஜலப்பிராந்தியங்களில்.*

டுனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி போக்குவரத்துகள் சைனியங்கள்.—*டுனிஸை* (Tunis) *சுற்றிலும்.*

விமான நிலயம்.—*டுனிஸ்* (Tunis).

கப்பற்கட்டும் தளங்கள், கப்பல்கள்.—*பிஸெர்ட்டா* (Bizerta).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—*நியூ கினியாவிலுள்ள வீவாக்* (Wewak), *மாடாங்* (Madang).

ஜப்பானியச் சைனியங்கள்.—*நியூ கினியாவிலுள்ள செய்டார்* (Saidor), *பின்ஸ்சாபென்* (Finschhafen), *மூபோ* (Mubo).

*டச்சு நியூ கினியாவிலுள்ள* டிமிகா (Temika).

ஜப்பானல் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமம்.—*டிராங்கல்தீவிலுள்ள பிரோணி* (Feroeni).

நகரம்.—*கைத்தீவிலுள்ள டோயல்* (Toeal).

கோலம்பங்காராதீவு.—(Kolombangara Island).

*அலூஷியனிலுள்ள* கிஸ்கா (Kiska).

எதிரி துருப்புகள்.—*பர்மாவிலுள்ள பின்பான்* (Pinbon).

விமான தளங்கள்.—*பர்மாவிலுள்ள ரங்கூன்* (Rangoon).

ரயில் ரோட் ஸ்தாபனங்கள்.—*பர்மாவிலுள்ள மேமியோ* (Maymyo) *யடாங்* (Ywataung).

**26—4—43.** (திங்கட்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே செண்டர்கள்—*வடமேற்கு ஜெர்மனி* (N. W. Germany), *ரைன்லாந்து* (Rhineland) *பிரான்ஸ்* (France).

இரவு.—கப்பற்கட்டும் துறைகள், ரயில்வே பக்கங்கள், விசாலமான இரும்பு, ஸ்டீல், என்ஜீன் தொழிற்சாலைகள்—*ஜெர்மனியிலுள்ள டூயிஸ்பர்க்* (Duisberg).

டுனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—*இதாலியிலுள்ள பாரி* (Bari), *ஸார்டினியாவிலுள்ள காகிலியாரி* (Cagliari), *ஸிஸிலியிலுள்ள அகஸ்ட்டா* (Augusta).

எதிரி போக்குவரத்துகள், சைனியங்கள்.—*டுனிஸியா* (Tunisia).

எதிரி விமான நிலயங்கள்.—*டுனிஸியா* (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பான் துணைக்காவலோடுகூடிய கப்பல்கள்.—*நியூ கினியாவிலுள்ள வீவாக்கிற்கு* (Wewak) *வடமேற்கில்.*

அட்டு தீவு (Attu Island).

ஜப்பானியச் சைனியங்கள்.—*அலூஷியனிலுள்ள* கிஸ்கா (Kiska), *நியூ பிரிடனிலுள்ள* உபிலி (Ubili), காஸ்மாடா (Gasmata), அரா (Arawe), *நியூ பிரிடனிலுள்ள பின்ஸ்சாபென்* (Finschhafen).

ஜப்பானியச் சைனியங்கள்.—*நியூ கினியாவிலுள்ள மூபோ* (Mubo)*வுக்கு அருகில்.*

தைலாவா எண்ணெய் கிடங்குகள்.—*ரெங்கூனிற்கு தெற்கிலே.*

ஜப்பான் விமான நிலயம்.—*பர்மாவிலுள்ள ஹெஹோ* (Hiho).

மத்திய ரயில்வே ஸ்டேஷன்.—*ரெங்கூன்* (Rangoon).

2 ஜப்பானல் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்கள்.—*அரக்கான் கடற்கரையில்.*

தொழிற்சாலை கட்டடங்கள், நதிப்போக்குவரத்துகள்.—*பர்மாவிலுள்ள ஐராவதியின் மேல்* (Irrawaddy).

**27—4—43.** (செவ்வாய்க்கிழமை).

ஐரோப்பா (Europe).

எதிரிக் கப்பல்கள்.—*ஜெர்ஸி* (Jersey).

விமானச் சண்டைகள்.—*கால்வாயில் (ஒரு எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).*

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—*எதிரி ஜலப்பிராந்தியங்களில்.*

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

துருப்புகளின் குவிவு, பீரங்கிகள், டாங்கிகள், போக்குவரத்துகள்.—டூனிஸியா (Tunisia) வில் யுத்தம் நடக்கும் பிராந்தியங்களில்.

விமான நிலயங்கள்.-பிஸர்ட்டா (Bizerta) விற்கு அருகில்.

எதிரி கப்பல்கள்.—ஸிஸிலியன் கால்வாய் (Sicilan Channel).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி தளம்.—டச்சு நியூ கினியா (Dutch New Guinea); கைதீவிலுள்ள வாட்டேக் (Watek).

எதிரிக் கப்பல்கள்.—அரபுயூரா (Arafura) கடல், ஆரோதிவிலுள்ள ரேபி (Rebi) கிராமம்.

எதிரி தளம்.—டிமோரிலுள்ள பேர்ன் (Bern).

விரகு குவியல்கள்.—காஸ்மாடா (Gasmata).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester).

ரயில் ரோட் ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள தாழி (Thazi).

தொழிற்சாலைகள், போக்குவரத்துகள்.—பர்மாவிலுள்ள பெஸ்ஸினுக்கு (Bessein)க் கருகில்.

ஸ்ப்ளை குவியல்கள்.-பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

எதிரி கிராமங்கள்.—பர்மாவிலுள்ள நாகிசுவாங் (Nagyichaung).

**28—4—43.** (புதன்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.-எதிரிக் கப்பல்கள்—நார்வீஜியன் கரை.

துறைமுகம்.—இதாலியிலுள்ள மெஸ்ஸினு (Messina).

கப்பற்கட்டும் துறைகள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

இரவு.—ஜெர்மனியிலுள்ள வில்கேல்ம்ஷேவன் (Wilhelmshaven).

சுரங்கவேடி பாவுதல்.—பால்டிக் கடல், எதிரி ஜலப்பிராந்தியங்கள்.

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி சைனியங்கள், போக்குவரத்து வண்டிகள்.—டூனிஸியா (Tunisia).

அச்சுவிமான நிலயம்.—டூனிஸியாவிலுள்ள எல் ஆவீனு (El Aouina).

எதிரிக் கப்பல்கள்.—டூனிஸ்குடா.

E-படகுதளம்.—ஸிஸிலியிலுள்ள ஸிராகூஸ் (Syracuse).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பான் விமானதளம்.—ஜில்பர்ட்தீவிலுள்ள டாராவா (Darawa).

ஜப்பான் ஸ்தாபனங்கள்.—ஷார்ட்லண்ட்ஸ் பிரதேசத்திலுள்ள காஹிலி (Kahili).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska) ஸாலமன்ஸிலுள்ள விலா (Vila).

இஞ்ஜின் ஷெட்டுகள்.—பர்மாவிலுள்ள கான்பாலு (Kanbalu).

கப்பற்கட்டும் துறைகள், கப்பல்கள்.—பர்மாவிலுள்ள காதா (Katha).

**29—4—43.** (வியாழக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தாக்கல்கள்—வடக்குப் பிரான்ஸ், ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium).

எதிரி கப்பல்கள்.—வட கடல் (North Sea) (2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

எதிரி காவலோடு கூடிய கப்பற்கூட்டம்.—டச்சுக்கரை—(2 எதிரி கப்பல்கள் நெருப்பில் கொளுத்தப்பட்டன).

டூனிஸியா (Tunisia),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி கப்பல்கள்.—டூனிஸ் (Tunis)—(2 கப்பல்கள் மூழ்கின).

அச்சு டாங்கிகள், மோட்டார் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

எதிரி விமான நிலயங்கள்.—டூனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—ஷார்ட்லண்ட்ஸிலுள்ள காஹிலி (Kahili), ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda); ஆருதீவிலுள்ள டோபோ (Dobo).

கொலம்பங்காரத்தீவிலுள்ள கேட்டார் (Gater).

விமானத்தளம்.—நியூ கினியாவிலுள்ள வீவா (Wewak) பிரதேசம்.

எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்கள்.—அக்யாப் தீவு (Akyab).

**30—4—43** (வெள்ளிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

பகல்.—சுரகவேடி பாவும் கப்பல்—பிரான்ஸி லுள்ள பிரிடானி (Brittany)யின் கரை.

இரவு.–தொழிற்சாலை, ராணுவ லக்ஷியங்கள்–ஜெர்மனியிலுள்ள எஸ்ஸென் (Essen).

டூனிஸியா (Tunisia).

**மத்தியதரைக்கடல்** (Mediterranean).

நாசகாரிகள், E-படகுகள்.—டேனிஸ் குடா (நாசகாரி மூழ்கிற்று).

எதிரி டாங்கிகள், மோட்டார் போக்குவரத்துகள்.—டூனிஸியாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் எதிரி விமான நிலயம்—டூனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

வேவு பார்த்தல்.—தென்மேற்கு பிராந்தியம்.

ஜப்பானியச் சரக்குக் கப்பல்.—நியூ ஐயர்லாந்திலுள்ள கேவியங் (Kavieng).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

ஜப்பானியச் சைனியங்கள்.—மிதா (Myitha) சமவெளி.

ஸ்டீமர்கள், களஞ்சியங்கள்.—பர்மாவிலுள்ள ஐராவதி (Irrawady), சிண்ட்வின் (Chindwin), நதிகளின்மேல் புரோமி (Prome) லிருந்து, முனிவா (Monywa) வரையிலும்.

ஸ்டீமர்.-பர்மாவிலுள்ள மைபான் (Myebon) துறைமுகம்.

மூலக்குகள்.—பர்மாவிலுள்ள டாங்கூப் (Taungup).

விமானமிறங்கும் இடங்கள்.—பர்மாவிலுள்ள மோல்மீன் (Moulmein) பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

ரயில் ரோட் பாலம்.—பர்மாவிலுள்ள மிதிங்கி (Myitnge).

**1—5—43.** (சனிக்கிழமை).

ஐரோப்பா (Europe).

விமான நிலயங்கள்.—பிரான்ஸிலுள்ள டிரேக்குவில்லி (Trocqueville).

ரயில்வே இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ், ஹாலந்து (Holland).

கடற்கரை ஸ்தாபனங்கள்—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire).

இரவு —சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

டூனிஸியா (Tunisia),

**மத்தியதரைக்கடல்** (Mediterranean).

துறைமுகம், பவர் ஸ்டேஷன்-ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினு (Messina).

எதிரி தரை சைனியங்கள்—டூனிஸியா கடற்கரை.

ஒரு வியாபாரக் கப்பல்—ஏஜியன் கடல் (Aegean Sea).

எதிரி விமான நிலயங்கள்—டூனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்—டச்சு நியூகினியாவிலுள்ள டிமிகா (Timika), நெபயர் (Nabire).

ஒரு சரக்குக் கப்பல்—மீனக்வார் (Manokwari) துறைமுகம்.

ஏற்றிறக்குமதி செய்யும் பிரதேசம்—லேங்கோர் (Langgoer).

விமான நிலயம்—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester).

ஜப்பானியச் சைனியங்கள்—நியூகினியாவிலுள்ள ரெயிஸ் (Reiss) முனை, மூபோ (Mubo) பிரதேசம்.

எதிரி விமான நிலயம்.—பெகோடா முனை (Pagoda).

கிட்டங்கி கட்டடங்கள்—மாண்டலே (Mandalay) க்கு அருகில்.

எதிரி ஸப்ளை—கிட்டு (Kwitu).

எதிரி ஸ்தாபனங்கள்-ஷாதுஷப், (Shaduzup), காமய்ங் (Kamaing), லாலாங்கா (La-Lawngga).

கோக்திக்பாலம்—(Goktaik viaduct) பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay)க்கும் லாஷியோவிற்கும் (Lashio) மத்தியில்.

எஞ்சின் ஷெட்டுகள்-பர்மாவிலுள்ள மேமியோ (Maymyo).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**26—4—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன்** (Britain).

ஒரு தகவலும் இல்லை.

டூனிஸியா (Tunisia).

முன்னேறித்தாக்கும் பிரிடிஷ் 1-ம் படை. டூனிஸியா (Tunisia).

ருஷ்யா (Russia).

லெனின்கிராட் (Leningrad).

தூரக்கிழக்கு (Far East).

கூடல்கனூர் தீவில் ஒரு இடம் (5 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**27—4—43.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**டுனிஸியா (Tunisia),**

விமானச் சண்டைகள்.—டுனிஸியன் கடற்கரைகள்.

**ருஷ்யா (Russia).**

கிராஸ் னோடார் (Krasnodar).

**28—4—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**டுனிஸியா (Tunisia).**

விமானச் சண்டைகள்.—டுனிஸியன் கடற்கரைகள் (Tunisian).

**ருஷ்யா (Russia).**

கிரெஸ் னோடார் (Krasnodar).

**தூரக்கிழக்கு (Far East).**

விமானச் சண்டை.—வங்காளக் குடா கடல் (ஒரு ஜப்பானிய விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

**29—4—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடவடிக்கை ஏதும் இல்லை.

**டுனிஸியா (Tunisia).**

விமானச் சண்டை.—சிஸிலியன் கால்வாய்.

**ருஷ்யா (Russia).**

ருஷ்ய சைனியங்கள்—குபான் பிரதேசம் (Kuban).

**30—4—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமானச் சண்டைகள்—இங்கிலீஷ் கால்வாய் (1 எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

**டுனிஸியா (Tunisia).**

விமானச் சண்டைகள்.—டுனிஸியன் கரையில்.

**ருஷ்யா (Russia).**

குபான் (Kuban) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—கூடல்கனூர் தீவு (Guadalcanar Island).

**1—5—43** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை ஏதும் இல்லை.

**டுனிஸியா (Tunisia).**

விமானச் சண்டைகள்.—சிஸிலியின் கால்வாய்.

**ருஷ்யா (Russia).**

குபான் (Kuban) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானச் சண்டைகள்.—சாம்பாவா தீவிலுள்ள பீமா (Bima), (3 ஜப்பானிய விமானங்கள் சுட்டு தள்ளப்பட்டன).

**2—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விரோதி விமான நடவடிக்கை ஏதும் இல்லை.

**டுனிஸியா (Tunisia).**

நேசதேசப் படை—அல்ஜீரியா (Algeria).

---

# யுத்தக் குறிப்புகள்.

**ருஷ்ய-போலிஷ் சச்சரவுகள்.** ஸ்மாலன்ஸ்க்குக்கருகில் காடின் காடுகளில் 10,000 போலிஷ் ஆபீஸர்களுடைய எலும்புகளை ஜெர்மானியர் கண்டுபிடித்ததாகச் சொல்லுவதைப்பற்றி விசாரணை செய்யவேண்டுமென்று சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தாருக்கு, போலந்து விடுத்த வேண்டுகோளுக்குப் பின் போலந்துக்கும், ருஷ்யாவுக்குமுள்ள உறவுகளை ருஷ்யா ரத்துசெய்ய உத்தேசித்துவிட்டது. மாஸ்கோவிலிருந்த போலந்தின் அயல் நாட்டு தூதரும் வெளியேறிவிட்டார். ருஷ்யாவிடம் போலந்துக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தியும், ருஷ்யாவுக்கு எதிர்முகமாகவும் எதிரியுடன் சதிசெய்துகொண்டும், போலந்தின் பத்திரிகைகள் செய்துவரும் பிரசாரமும்தான் போலந்தின் பேரில் ருஷ்யாவுக்கு ஏற்பட்ட கோபத்துக்குக் காரணங்கள். ருஷ்யாவைக் கபடமாகத் தாக்குவதற்கும், வெண்மை ருஷ்யாவிலும், ருஷ்ய யூக்ரேனிலும், லித்வேனியாவிலும் பிரதேசங்கள் சம்பாதித்துக்கொள்ளுவதற்கும் சில போலிஷ் ஜனங்கள் ஜெர்மானியர்களுடன் ஒப்பந்தம் செய்துவிட்டார்களென்று ருஷ்யா சந்தேகப்படுகிறது.

வி வி வி வி வி

**காடின் காடு சம்பவம்பற்றி பிரசாரம்.** இந்த சம்பவமானது கோயபல்ஸின் பொய்ப் பிரசாரத்திற்கு லாயக்குள்ளதாக ஆகிவிட்டது. காடின் காட்டில் நடந்த கொலைகளைப் பார்த்தாலே, ஆங்கிலேயர்களின் பிரார்த்தனை பூர்த்தியானாலும் ஜெர்மானியர்கள் நடத்திவரும் ஐரோப்பிய யுத்தத்தில் ருஷ்யா வெற்றிபெற்றாலும் ஐரோப்பாவில் என்ன நடைபெறுமென்பது முன்கூடி வெளியாகுகிறது என்று கோயபல்ஸ்

பறைசாற்றிவருகிறுன். ருஷ்யாவிலும், வட ஆபிரிக்காவிலும் தோல்வியுற்ற பிறகு ஜெர்மனி வேறு முறையில் பேச ஆரம்பித்துவிட்டது. உலகத்தை ஜயிப்பவர் என்ற பேச்சை விட்டு விட்டு ஐக்கிய ஐரோப்பாவை போல்ஷிவிஸத்திலிருந்து ரக்ஷிக்கப்போவதாகச் சொல்லி வருகிறது..

வி வி வி வி வி

**காடின் சம்பவத்தில் அபத்தங்கள்.** ஜெர்மானியர்கள் போலந்து ஆபீஸர்களின் புதைகுழிகளைக் கண்டுபிடித்து இரண்டு வாரங்களுக்கு மேலாகின்றன. அவர்களுடைய விருத்தாந்தங்களில் முன்னுக்குப் பின் விரோதமும், அபத்தங்களும் அநேக மிருக்கின்றன. முதலில் சவங்களைக் கண்டுபிடிக்க முடிந்ததாம். இப்பொழுது முடிய வில்லையாம். முதலில் இந்தக் கொலைகள் சம்பந்தமாகத் தகவல்களை ஒரு வருஷத்துக்கு முன்பே அறிந்தார்களென்று சொல்லப்பட்டது. இப்பொழுது சமீபத்தில்தான் இதைப் பற்றி கேள்விப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கொலையுண்டவர்களின் சங்கியை 1,200 லிருந்து 15,000 ஆக மாறிவிட்டது. இந்த விவரங்களும் மாறுபாடாகச் சொல்லப்படு கின்றன.

போலிஷ் அரசாங்கத்தார் ஜெர்மன் பிரசாரத்தை சுலபமாக ஏற்றுக்கொண்டார்கள் என்பது துக்கிக்கத் தகுந்தது. நாஸிகளின் கொடுமைகளுக்கும், தேசப்பிரஷ்ட முறை களுக்கும் உட்பட்ட போலிஷ் மக்கள் இந்தப் பிரசாரத்தின் உண்மையை அறிந்திருக்கக் கூடும். ராட்டர்டாமிலும், லிடிஸ்ஸிலும் நடந்த சம்பவங்களை அவர்கள் மறந்திருக்க முடியாது. போலந்திலுள்ள ஜெர்மானியர்களை போலிஷ் ஜனங்கள் அக்கிரமமாக நடத்தினுர் களென்று கற்பனையாக ஜெர்மனி சொன்னதையும் அவர்கள் மறந்திடமுடியாது. இதற்கு அத்தாக்ஷியாக பொய் சாக்ஷியமும், போலி புகைப்படங்களும் உபயோகிக்கப்பட்டன.

வி வி வி வி வி

**தகவல் ஆராய்ச்சி.** எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், காடின் சம்ப வத்தின்மூலம் சமாசாரம் கண்டுபிடிப்பதாகத் தோன் றுகிறது. 1941-ம் வருஷக் கடைசியிலிருந்து ஜெர்மானியர்கள் ஸ்மாலன்ஸ்க்கை ஆக்கிரமித் திருந்தபோதிலும், திடுக்கிடக்கூடிய இந்த சம்பவத்தை அவர்கள் ஒரு வருஷத்துக்கு முன்பு தான் அறிந்தார்களென்பது ஆச்சரியமாகயிருக்கிறது. நேசநாடுகளுக்கு பாதகமாக அல்ப மான சம்பவங்களையும் மிகையாகச் சொல்லிவரக்கூடியவர்கள் இந்த சம்பவத்தை இது வரையில் வெளிப்படுத்தாமல் வைத்திருந்ததும் விந்தையானது.

ஸர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாவது, வேறு எந்த சங்கமாவது தற்போதைய சந்தர்ப் பங்களில் பாரபக்ஷமில்லாத விசாரணை நடத்துவது முடியாத காரியமென்றும், போலிஷ் அரசாங்கத்தார் அறிந்திருக்கவேண்டும். ஸ்மாலன்ஸ்க் ஜெர்மானியர் வசமிருப்பதால் அவர்கள் சுலபமாக சாக்ஷியம் உண்டுபண்ணக்கூடும். குறிப்பிட்டவைகளை ஆஜர் செய்யக்கூடும். சிலவற்றை மறைத்தும் விடலாம். ஜெர்மானியர்கள் சொல்லுகிறபடி கொலைகள் நடை பெற்றிருந்தால் ஜெர்மானியர்கள்தான் இதற்குக் காரணமாயிருக்கவேண்டும். ஏனென்ருல் போலந்திலும், இதர நாடுகளிலும் ஜெர்மானியர்கள் செய்த அட்டூழியங்கள் எல்லோராலும் அறியப்பட்டவைகள்தான். எவ்விதத்திலும், இம்மாதிரியான கொடுஞ்செய்கைகளை யுத்தத் துக்குப் பின்தான் நடுநிலை வகிக்கும் சபையார்கள் பரிசீலனை செய்யவேண்டும். இப்பொழுது யுத்த மத்தியில் போலிஷ்காரர்கள் செய்த பிளவு, புத்தியின்மையையும் அவசரத் தன்மை யையும் வெளிப்படுத்துகிறது.

வி வி வி வி வி

**போலிஷ் அரசாங்கத்தின் பதில்.** ஏப்ரல் 28-ம் தேதி போலிஷ் அரசாங்கம் பதில் அனுப்பியதிலிருந்து குற்றத்துக்குப் பரிகாரம் தேடு வது போலிருக்கிறதே யொழிய, நிலைமையைச், சரிப்படுத்துவதாகத் தெரியவில்லை. ருஷ்யா வுடன் சிநேக முறையில் ஒப்பந்தம் ஏற்படவேண்டுமென்று போலந்து பிரியப்படுகிறதென் றும் நேசநாடுகளின் ஐக்யபத்யத்திற்கும், ஒத்துழைப்புக்கும் போலந்துக்குள்ள பொறுப்பை அது உணருகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹிட்லருடன் சதி செய்வதென்பது மறுக்கப்படுகிறது. போலிஷ் ஆபீஸர்கள் மறைந்ததும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விசாரணை நடத்த வேண்டுமென்பதும் பரிகரிக்கப்பட்டுவிட்டன. இதற்குப் பதிலாக ருஷ்யா விலுள்ள போலிஷ் ஸ்திரீகளும், குழந்தைகளும், பழைய சிப்பாய்களும் தாயகம் திரும்ப வேண்டுமென்று வேண்டப்படுகிறது.

சச்சரவு ஓய்ந்துவிடவில்லை. போலந்தின் பழைய குற்றச்சாட்டை வாபஸ் பெற வேண்டுமென்று ருஷ்யா வற்புறுத்துகிறது. பிரிடனும், அமெரிக்காவும் தங்காளாலியன்ற அளவு சமாதானம் செய்ய முயன்று வருகின்றன.

வெற்றி பெறும் சமயத்தில் நேச நாடுகளுக்குள் ஒற்றுமை அதிகமாயிருக்கவேண்டியது போக பிளவு ஏற்பட்டுவிட்ட தென்பது வருந்தத்தக்கது. கஷ்டங்கள் அனுபவித்திருந்தும், நெருக்கடி ஏற்படும் சமயத்தில் ஸ்திரமான புத்தியுடன் போலந்து நடந்துகொள்ளவில்லை. முன்னொரு சமயத்தில் ஸெகோஸ்லாவோகியாவைப் பங்கு போடுவதில் ஜெர்மனிக்குப் போலந்து உடந்தையாகயிருந்தது. அதினின்றும் ஸ்வதந்திரமுள்ள ஸ்லவோகியா தேசம் உண்டாகிற்று. இப்பொழுது விசாரணை நடைபெற வேண்டுமென்று சொல்லிக்கொண்டே எதிரி தோல்வியாடையாமலிருக்கும் பொழுதே தேசங்கள் வேண்டுமென்று போலந்து பாத்யம் கொண்டாடுகிறது. கரடியைக் கொல்வதற்கு முன் தோலுக்கு ஆசைப்படுவது போல் இருக்கிறது.

வி வி வி வி வி

**பழயதும், புதியதும்.** நாஸிகள் ஏற்கனவே சொல்லி வந்ததையும், இப்பொழுது சொல்லிவருவதையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். யுத்தத்துக்குமுன் ஜெர்மானியர்கள்தான் உயர்வான ஜாதியாரென்றும், ஸெர்பியர்கள் இராஜாவைக் கொலை செய்தவர்களென்றும், பிரெஞ்சுக்கார்கள் டம்பாசாரிகளென்றும், இதாலியர்கள் கொலைகாரர்களென்றும், ஜப்பானியர்கள் மனிதக் குரங்குகளென்றும், ஓநாய்களென்றும் சொல்லப்பட்டதி. இப்பொழுது அவர்களெல்லாம் சகாக்களாம். இதற்கு முன்னுக மெயின் காம்பு என்னும் புஸ்தகத்தில் "மனிதவர்க்கத்தினிடம் அனுதாபமும் சாந்தமும்" காட்ட வேண்டுமென்ற நோக்கமானது உலகம் பூராவையும் ஜயித்து அடிமையாக்கி ஜெர்மானியர்கள் எஜமானர்களாக ஆகும்வரையில் கவனிக்கப்படத்தக்கதில்லை என்று சொல்லப்பட்டது. படையெடுப்பு பயம் அதிகரித்து வரும்பொழுது ஹிட்லர் சொல்லுகிருன். "ஐரோப்பாவைத் திருத்தியமைப்பது என்ற பேச்சுப்படி ஜெர்மன் ஜாதியாரல்லாதவர்களை அடக்கி யாளுவது என்று பொருள்படவேயில்லை."

சென்ற வருஷத்தில் போல்ஷிவிஸ்ட் ராக்ஷஸனை அடித்துத் தொலைத்துவிடுவது, ருஷ்யாவின் நிலக்கரி, இரும்பு, எண்ணெய், கோதுமை இவைகளை அடைவதற்காகப் பிரதேசங்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற பேச்சுகள் நிரம்பியிருந்தன. இப்பொழுது நாஸிகளின் ஆசை குறைந்துவிட்டது. போல்ஷிவிஸத்தினுல் நாகரீகம் அழிவுபடாமல் காப்பாற்றப்பட வேண்டிய ஜனசமூக கைங்கரியத்தில் ஜெர்மனி ஈடுபட்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி

**ஹிட்லர் கூட்டும் மகாநாடுகள்.** படையெடுப்பு பயம் அதிகரித்து வருவதினுல் ஹிட்லர் தன்னுடைய பரிவாரங்களுடன் அடிக்கடி கூடிப் பேசி வருகிருன். முந்திய வாரங்களில் போரிஸ் மன்னரையும் ஹோர்த்தியையும், ஹங்கேரி ருமேனியாவின் மந்திரிகளையும் கண்டு பேசினுன். இந்த வாரத்தில் நார்வேயிலிருந்து குயிஸ்லிங்கையும் ஸ்லவோகியாவிலிருந்து டிஸோவையும் பிரான்ஸிலிருந்து லவாலையும் வரவழைத்து ஹிட்லர் பேசியிருக்கிருன்.

ஏப்ரல் 9-ம் தேதியன்று, ஜெர்மானியர் படையெடுப்பு வருஷாந்திர விழாக் கொண்டாடப்பட்டது. இதிலிருந்தே நார்வே ஜனங்கள் எந்தக்கக்ஷியை ஆதரிக்கிருர்களென்று வெளியாகுகிறது. ஐரோப்பாவிலே மிகப் பெரிதான விமான தளம் டிராண்ட்ஹீமில் கட்டப்பட்டிருக்கிறது. ஆஸ்லோ போர்டிலும், லார்விக்கிலும், டிராபக்கிலும் நார்வேயின் கடற்கரைப் பிரதேசத்தை ஹிட்லர் பலப்படுத்தியிருக்கிருன். ஆகிலும் வெறுப்புள்ளவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவது கண்டு அவன் பயப்படுகிருன். குயிஸ்லிங்கை நேரில் வரவழைத்து அவனிடம் ராஜவிசுவாசப் பிரமாணம் வாங்கப்பட்டது. இதற்காகத்தான் ஸலவோகியாவின் பொம்மைத் தலைவரான டிஸோவும் வந்திருந்தான். ஸெக்கர்களின் கொடுமைகளிலிருந்து விடுவிப்பது என்ற வியாஜத்தின் பேரில் 1939-ம் வருஷ நெருக்கடியில் ஸ்லவோகியா ஸ்தாபிக்கப்பட்டது. சமீப காலத்தில் அந்த பொம்மை அதிகாரி கலகம் செய்ய ஆரம்பித்து விட்டான். ருஷ்யப் போர்முனைக்கு துருப்புகளை மேல் மேலும் அனுப்பவேண்டுமென்ற வேண்டுகோளுக்கு பதில் சொல்ல முடியவில்லை. ஆகையால் டிஸோவை வரவழைத்து ஹிட்லர் சமாதானப்படுத்தினுன். கடைசியாக, படையெடுப்பு

ஏற்பட்டால் எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி உத்தரவுகள் போடுவதற்காக பிரான்ஸிலிருந்து லவால் வந்து சேர்ந்தார். ஜெர்மனியில் வேலை செய்வதற்காக ஒவ்வொரு நாளும் கட்டாயத்தின் பேரில்சேர்க்கப்படுபவர்களின் சங்கியை 10,000-க்கு வந்து விட்டது. மேலும் 50,000 பிரெஞ்சு கைதிகளுக்கு பதிலாக 5,00,000 தொழிலாளர்கள் அனுப்பப்படவேண்டுமென்று ஹிட்லர் வேண்டுகிறான். 18 முதல் 25 வயது வரையில் குழந்தைகள் பெறாத ஸ்திரீகளின் ஜனக்கணிதியை ஜெர்மன் ரகசிய போலீஸார் தயாரித்து வருகிறார்கள்.

பிரான்ஸில் லவாலைத்தான் ஜனங்கள் மிகுதியாக வெறுக்கிறார்கள். பிரான்ஸில் ஒலிபரப்பியதிலிருந்தும் மற்றொரு தகவல் மூலமாகவும், ஹிட்லருடன் சம்பாஷணை செய்து விட்டுத் திரும்பும் பொழுதோ, பாரிஸிலுள்ள மாடிக்னன் என்னும் சிற்றுண்டி சாலையில் தங்கியிருந்த பொழுதோ அல்லது தன்னுடைய கவசம் பூண்ட ரெயிலில் பிரயாணம் செய்யும் பொழுதோ லவால் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டானென்று தெரிய வருகிறது. இந்த விஷயத்தை விஷிஸர்க்கார் மறுக்கிறார்கள்.

வி வி வி வி வி

**ஜெர்மனியின் கொள்ளை.** ஐரோப்பாவில் ஜெர்மானியர் கொள்ளையடிப்பது அதிகரித்துவிட்டது. ஏப்ரல் 27-ம் தேதியன்று அமெரிக்க அறிக்கை சங்கம் வெளியிட்ட தகவல்களிலிருந்து, 9,000 மிலியன் பவுன்கள் பொருமானமுள்ள சாமான்கள் சூரையிடப்பட்டனவென்றும், மிலியன் கணக்காக கொள்ளையடிக்கப்பட்டதென்றும் தெரியவருகிறது. தொழிற்சாலைகளிலுள்ள ஆயிரக்கணக்கான யந்திரங்களை அப்புறப்படுத்தி ஜெர்மனிக்குக் கொண்டுபோய் அமைத்து வருகிறார்கள். லக்ஷக்கணக்கான கால்நடைகள் அப்புறப்படுத்தப்பட்டன. விநோதமான சாமான்கள், மர சாமான்கள், ஆயுதங்கள் எல்லாம் ஜெர்மனிக்குப் போய்விட்டன. 2 மிலியன் எடை பொருமானமுள்ள கப்பல்கள் ஜெர்மனி வசமாகின. இவையெல்லாம் தீவட்டிக்கொள்ளை.

ஆக்கிரமிப்புச் செலவு வகையில் 2,000 மிலியன் பவுன்கள் வரி விகிதம் போடப்பட்டிருக்கிறது. செலவு போக மீதப்படுவதை, அடிமைப்பட்ட நாடுகளிலுள்ள தொழில் ஸ்தாபனங்களை விலைக்கு வாங்குவதில் ஜெர்மனியே உபயோகித்து வருகிறது.

வி வி வி வி வி

**டூனிஸியா யுத்தம்.** டூனிஸியா யுத்தமென்பது இனிமேல் வட ஆபிரிக்காவையும், இதாலிய சாம்ராஜ்யத்தையும் பிடிக்க நடைபெறவில்லை. அவைகளை ஏற்கனவே நாம் பிடித்து விட்டோம். பர்மிங்ஹாமில் மிஸ்ட்டர் L. S. அமெரி சொற்பொழிவில் சொன்ன பிரகாரம், ஹிட்லர் ஏற்படுத்திய இரண்டாம் போர்முனையென்று சொல்லலாம். வட ஆபிரிக்காவில் நேசநாடுகளின் முன்னேற்றத்தைக் கண்டு பயந்து அவைகளைத் தடுப்பதற்காக டூனிஸியாவில் பலமான தற்காப்புகள் செய்ய ஹிட்லர் உத்தேசித்தான். ஹிட்லருக்கு ஏற்படப்போகும் அதோகதிக்கு அவன்தான் காரணம். அவனுக்கு ஏராளமான நஷ்டமேற்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனை ஏற்படுத்தியிருந்தாலும் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிராது. ஸ்டாலினுக்குப் பளுக்குறைந்து விட்டது. ருஷ்யாவிலிருந்த அச்சுப்படைகளும் முஸ்தீப்புகளும் டூனிஸியாவுக்குப் போய்விட்டன.

டூனிஸியாவில் நேசதேசப்படை அமைப்பு பின்வருமாறு: என்பிடாவில்லியிலிருந்து மெட்ஜஸ் எல்பாப்புக்கு முன்னேறும் யுத்தம் 8-ம் படை நடத்தவேண்டியது. கப்ஸாவிலிருந்த அமெரிக்கத் துருப்புகள் வடக்குக் கரைப் பிரதேசத்துக்கு சென்றுவிட்டார்கள். ஸ்வதந்திர பிரெஞ்சுத் துருப்புகள் பிரிடிஷ் 1-ம் படையின் இடது பக்கத்து சைனியங்கள் ஆக்கிரமித்திருந்த பிரதேசத்தில் ஊன்றியிருக்கின்றன. அச்சு சாட்டாரைச் சுற்றியிருக்கும் வளையம் பூர்த்தியாகிவிட்டது.

வி வி வி வி வி

**மலைப் பிரதேசங்களுக்காக யுத்தம்.** ஆகிலும் வேகமாக முன்னேறுவது சாத்யமில்லை. ஏனென்றால் நேசநாடுகளின் டாங்குகள், பீரங்கிகளின் உயர்வு பயன்படாது. இனிமேல் தரைப்படையின் முன்னேற்றம்தான் அவசியம். கத்திமுனை போன்ற மலைச்சரிவுகளில் கத்தியும், சனியனும், கைத்துப்பாக்கியும், டாமித் துப்பாக்கியும் ஆயுதமாக உபயோகித்துச் சண்டை புரியவேண்டும். இவ்விடத்தில் கோயரிங்கின் சிறந்த படைகள் எதிர்த்து நின்று பலமாகச் சண்டை போடுகின்றன. அவர்கள் இருக்கும் ஸ்தானம்

கள் அசைக்க முடியாதவை. என்பிடாவில்லிக்கு வடக்கே மலைத்தொடர்களிலிருந்து ஆரம்பித்து சமுத்திரம் வரையில் செல்லும் அநேக குன்றுகளிருக்கின்றன. இந்தக் குன்றுகளில் சிலவை செங்குத்தாகயிருப்பதோடு எதிரிவசமிருக்கின்றன. மேலும் இந்த ஸ்தானங்களை டிஸம்பர் மாதம் முதல் எதிரி பலப்படுத்தியிருக்கிறான். எதிரியின் பீரங்கிகளும் இயந்திர பீரங்கிகளும் பக்கத்திலும் முன் பக்கத்திலும் இவைகளைக் காப்பாற்றுகின்றன. வேகமாக முன்னேறுவதற்கு இவைகள் தான் காரணங்கள்.

வி வி வி வி வி

**டாக்ருறுவைப் பிடிக்க யுத்தம்.** ஆகிலும் நேசநாடுகள் சாவாதானமாகவும் மெதுவாகவும் முன்னேறுகிறார்கள். என்பிடாவில்லியிலிருந்து உள் பக்கமாகப் போகும் ரஸ்தாவிலுள்ள டாக்ருறுவைப் பிடித்த வைபவத்தை கவனியுங்கள். இந்தப் பிரதேசமானது விசித்திரமாயும் நேர்த்தியானதுமான திமிழ் போன்ற ஒரு சிறிய குன்று. பெரிய மலையில்லை. இதன் பக்கங்கள் செங்குத்தானவை. பிரிடிஷார் குன்றைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். அங்கிருந்த ஜெர்மன் படைகள் துண்டிக்கப்பட்டன. மலைச்சரிவின் ஆழமான குழிகளில் பதுங்கியிருந்த ஜெர்மன் துருப்புகள் இயந்திர பீரங்கிகளின் உதவியுடன் சுட ஆரம்பித்தார்கள். எதிரிகள் சுரங்கவெடிகள் பாவியிருந்த காக்டஸ் புதர்களின் வழியாகப் பிரிடிஷ் துருப்புகள் முன்னேறின. இந்த கோரமான சண்டையில் இருதரப்பாருக்கும் அதிக ஆள் சேதம் ஏற்பட்டது.

வி வி வி வி வி

**பிஸர்ட்டா.** • நேசநாடுகளுக்கு பிஸர்ட்டா நகரமும் ஏரியும் தென்பட்டு விட்டன. டுனிஸ் வளைகுடாவின் உச்சியிலிருக்கும் பிஸர்ட்டாவானது பிரெஞ்சுக்காரர்களால் முதலில் பலப்படுத்தப்பட்டது. பிறகு ஜெர்மன் இஞ்ஜினியர்கள் அரண் கட்டினார்கள். அங்கே பெரிய ஆயுத சாலைகளும், சாமான் கிடங்குகளும், விசாலமான கப்பல் பழுதுபார்க்கும் தளங்களுமிருக்கின்றன. கடலிலிருந்து தரை வரையில் அது எட்டு மைல் நீளமுள்ளது. மலைப்பிரதேசத்தில் ஒரு காலவாய் ஓடுகிறது. அதன் வழியாக ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டுபோகப்படுகிறது. இந்த ஏரிகளுக்கு மத்தியில் பெர்லிவில்லி என்னுமிடத்தில் மற்றொரு ஆயுதசாலையும் நான்கு பெரிய கப்பல் தளங்களுமிருக்கின்றன. இரண்டு ஏரிகளுக்கும் மத்தியில் ஒரு தொங்கு பாலத்தின் வழியாக இருப்புப் பாதை போடப்பட்டிருக்கிறது. துறைமுகத்துக்குச் சமீபத்தில் இரண்டு விமான தளங்களிருக்கின்றன. பூயிடா ஏரியின் கரையில் ஸித்திஆமத் என்னுமிடத்தில் கனமான விமானங்களும் இறங்கக்கூடிய ஒரு பெரிய விமான தளம் ஒன்று. துறைமுகத்தின் கடல் விமானங்கள் தங்குமிடம் மற்றொன்று.

வி வி வி வி வி

**விமானப்படையின் யுத்த தந்திரம்.** மலைப்பிரதேசத்தில் நேசதேச விமானப்படையின் உபயோகம் அதிகமில்லாததால் தரைப்படைகளுக்கு பாதுகாப்பு செய்வதும் ஸப்ளைகள் கொண்டு போவதுடன் எதிரியின் கடல், ஆகாய மார்க்கங்களை அழித்து வருகின்றன. ஜெனரல் ஈஸன்ஹவர் சொல்லுகிறபடி அவைகள் இருவகைப்பட்ட தந்திரங்களை அனுஷ்டிக்கின்றன. தரைப்படைகளை சண்டை விமானங்களும், லேசான வெடி விமானங்களும், வேவுபார்க்கும் விமானங்களும் பாதுகாப்பு செய்துவருகின்றன. இரண்டாவதாக டுனிஸியாவிலும், ஸார்டினியாவிலும், ஸிஸிலியிலும் தெற்கு இதாலியிலுமுள்ள ஸ்தலங்களை வெகுதூரம் சென்று வெடி குண்டுகளால் தாக்குகின்றன. இதாலியப் படையைத் தாக்குவது மற்றொரு லக்ஷியம். நேபிள்ஸ் துறைமுகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டு இப்பொழுது ஸ்பெஸியா துறைமுகத்திலிருந்தும் வெளியேறிவிட்டது. கடல் மார்க்கமாகச் செல்லும் அச்சுநாடுகளின் விமானப் போக்குவரத்துகளை அழிப்பது தான் நேசதேச விமானப்படையின் முக்கியமான வேலை. இரண்டு வாரங்களுக்கு முன்னால் இரண்டு நாட்களில் ஸிஸிலிக் கால்வாயில் 112 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மற்றொரு சமயத்தில் 120 மனிதர்களும் அல்லது 10 டன்கள் எடைமானமுள்ள சாமான்களும் கொண்டுபோகக்கூடிய மெஸ்ஸர்ஸிமிட் விமானங்களில் 31 நாசமாகின. இந்த கனமான விமானங்களை குருவிகளைச் சுடுவது போலும் மண் பொம்மைகளைச் சுடுவது போலும் வீழ்த்திவிட்டார்கள். நேசதேச விமானப்படை சரித்திரத்திலேயே புகழ்பெற்று விட்டதென்பதில் சந்தேகமில்லை. இதே மாதிரி அது நடத்திவரவேண்டுமென்று பிரியப்படுகிறேன். ஆகிலும் இரண்டாம் போர்முனை ஏற்படுத்துவது முக்கியமானது.

**இதாலியக் கடற்படை.** எந்த நிலைமையிலும் தன்னிடமிருக்கும் கடற்படையை பலி கொடுத்து டூனிஸியாவிலுள்ள படைகளை மீட்பதாக முஸோலினி பிரியப்படவில்லை. இதாலியக் கப்பல்கள் டாரண்டோவுக்குச் சென்று கொண்டிருக்கின்றன. இச்சமயம் இதாலியக் கடற்படையின் வலிமை குறைந்துவிட்டது. போதுமான முஸ்தீப்புகளில்லை. டூனிஸியாவில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் துருப்புகளைக் காப்பாற்றும் வேலையில் கடற்படை நஷ்டம் ஏற்பட்டால், இதாலியின் தற்காப்பு பலம் குறைந்து விடுமென்று இதாலி பயப்படுகிறது.

வி வி வி வி வி

**ருஷ்யா.** இன்வெஸ்டியா என்னும் பத்திரிகையில் மகத்தான கோரமான நிகழ்ச்சிகள் நடைபெறும் காலம் கிட்டி விட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. "ஜெர்மானியர்கள் மறுபடியும் முன்னேறித் தாக்குவார்களென்ற ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன" என்று செம்படை வெளியிடுகின்றது. ரோந்து நடமாட்டங்களை முற்போக்காகக்கொண்ட புயல் காற்றானது எந்த நேரத்திலும் கிளம்பக்கூடும். ஜெர்மானியர்கள் ஏராளமான படைகளைக் குவித்து வருகிறார்கள். மே தினத்தில் ஸ்டாலின் செய்த பிரசங்கத்திலிருந்து நம்பிக்கை உண்டாகிறது. அவர் சொன்னதாவது:— "பாஸிஸ்டு மிருகத்தின் முதுகெலும்பை செம்படையும், நேசநாட்டுப் படைகளும் முறித்து விடும் காலம் கிட்டிவிட்டது." இதற்கு ஆதாரங்களையும் அவர் சொல்லியிருக்கிறார். வட ஆபிரிக்காவிலும் ஜெர்மன் பிரதேசத்திலும் ஆங்கிலேய-அமெரிக்கப் படைகள் அடித்து வருவது போல கிழக்கேயும் ருஷ்யர்கள் அடித்து வருகிறார்கள் என்றும் எல்லோருமாகச் சேர்ந்து ஹிட்லரின் யுத்த முயற்சிகளை வேறறுத்து யுத்தப் போக்கையே மாற்றி விட்டார்களென்றும் அவர் சொன்னார்.

வி வி வி வி வி

**மார்ட்டினிக் தீவு.** மார்டினிக் தீவுடன் ஏற்பட்டிருந்த எல்லா ஒப்பந்தங்களையும் அமெரிக்கா ரத்து செய்து விட்டது. துறைமுகத்திலுள்ள கப்பல்களிலுள்ள வேலைக்காரர்கள் வேலையிலிருந்து விலகி விட்டார்கள். உணவுப் பொருள்களின் ஸப்ளை நின்று விட்டது. மார்ச்சு மாத ஆரம்பத்தில் மார்ட்டினிக்கின் உயர்தர கமிஷனரான ராபர்ட் கடற் தளபதி அச்சு நாட்டுக்கு எதிரிடையாக யுத்தத்தில் கலந்து கொள்ளுவதாக வாக்குறுதி செய்தார். நிகழ்ச்சிகளிலிருந்து அவர் அச்சு நாடுகளின் கையாள் என்று புலப்பட்டுவிட்டது. அமெரிக்காவில் பின்கண்ட பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கிறது. "அமெரிக்க அரசாங்கத்தார் விஷி ஸர்க்காரை ஒப்புக்கொள்ளவில்லை. ஆண்டிலிஸ் தீவுகளில் விஷி நிர்வாகத்துடன் தொடர்பு வைத்திருக்கும் அல்லது அதற்குட்பட்டு அமுல் நடத்தும் எந்த பிரதிநிதியுடனும் பேரமும் செய்யாது அவனை, மதிக்கவும் மாட்டாது."

வி வி வி வி வி

**சிப்பாய்களுக்குத் தபால்கள்.** டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் பின்கண்ட ரிபோர்ட்டு, வெளியாகியிருக்கிறது.

"டூனிஸியாவில் எட்டாம் படையுடன் இந்தியாவின் 4-வது டிவிஷன் துருப்புகளும் முன்னேறுகின்றன. தபால் வசதிகளும், தபால் ஆபீஸ்களும் கூடச்செல்லுகின்றன. இவைகளுக்கும் சங்கடமான நிலைமை ஏற்படக்கூடும்.

"தற்போதிய நிலைமையில் தபாலாபீஸ் பாதுகாப்புக் கிடையாது. திருட்டுப் போகாமல் ரக்ஷணை செய்யப்பட்டுவருகிறது. பணம், ஸ்டாம்புகள், ஸீல்கள் எல்லாம் இரும்புப் பெட்டியில் வைத்து ஸீல் வைக்கப்பட்டு மூன்று அடி ஆழமுள்ள குழியில் புதைக்கப்படுகிறது. பீரங்கி வெடிகளிலிருந்தும் வெடிகுண்டுகளிலிருந்தும் காப்பாற்றத்தான் இம்மாதிரி வைக்கப்படுகிறது.

"இராக்காலத்தில் போஸ்ட்டு மாஸ்ட்டர் குழியில் தன்னுடைய பொக்கிஷத்துடன் ஒரு சிறிய பீவெசஸ் கூடாரத்தில் தூங்குவார். இந்தக் கூடாரத்தின் அமைப்பைப் பார்த்தால் எகிப்தில் பாரோ என்பவர் பொக்கிஷத்துடன் பிரமிட்டுகளில் தூங்குவதும் போலிருக்கின்றன. ஆனால் ஒரு வித்யாசம் உண்டு. பாரோவைப் போலில்லாமல் போர்முனை போஸ்ட் மாஸ்ட்டர் உயிருடன் தூங்குகிறார்."

# பாம்பர்களின் முக்கியத்வம்.

**மாலரி ப்ரௌன் (அப்ஸர்வர் பத்திரிகை).**

வெடி விமானங்களின் விபரங்களைப்பற்றி ஜனங்களுக்கு அடிக்கடி சொல்லாததினால் அவைகள் மறைபொருளாகயிருக்கின்றன. ஸெவர்ஸ்கி, ஸிப் போன்றவர்கள் யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கு வெடிகுண்டுகள் போடுவதுதான் அவசியமென்று அபிப்பிராயப்படு கிருர்கள். இந்த முன்னேற்ற யுத்தத்தைத்தான் முதலில் கவனிக்கவேண்டுமென்றும் அடுத்த படியாகத்தான் மற்றெல்லா முறைகளிலும் கவனம் செலுத்தவேண்டுமென்றும் அவர்கள் வற்புறுத்துகிருர்கள். ஜெர்மனியையும், இதாலியையும் விமானங்கள் கூட்டமாகச் சென்று தாக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டவர்களுமுண்டு. அப்பொழுது பலமான தாக்குதல் செய்வதற்குக்கூடப் போதுமான விமான உற்பத்தி இல்லாத காலம்.

ஆகையால் வெடி விமானங்களின் உபயோகத்தைப்பற்றிய விஷயம் நன்ருக எல்லா அம்சங்களையும் பரிசீலனை செய்து முடிவுக்குவர வேண்டிய பிரச்னையாகும். யுத்தத்தில் தற்போதைய நிலைமையில் அச்சு நாடுகளைத் தாக்கும் முறையில் நேசநாட்டாருக்கு வெடி விமானங்கள் எவ்விதம் ஒத்தாசை செய்யும் என்பதை கவனிப்போம்.

இதற்கு முன்னதாக கவனம் செலுத்தவேண்டிய அம்சங்கள் வெடிகுண்டு எறியும் விமானப்படை அமைப்பது முதலாவது அவசியம். இதைவிட தற்காப்பு முறைகளில் இரண்டு அம்சங்களில் முன்னதாகக் கவனம் செலுத்தவேண்டும். முதலாவது நேசநாட்டுக்கு உயிர்நாடி போன்ற மார்க்கங்களைக் காப்பாற்றவேண்டும். அதாவது யூபடகுகளின் தொந் தரவுகள் ஏற்படாமல் நமது கப்பற்படையைக் காப்பாற்றவேண்டும். இரண்டாவது, மத்திய தரைக்கடல் பிரதேசத்திலும் பஸிபிக் மகா சமுத்திரத்திலும் இப்பொழுது நடைபெறும் மகத்தான போர்களில் ஈடுபட்டிருக்கும் தரைப்படைக்கும் கடற்படைக்கும் போதுமான விமானப் பாதுகாப்பும் ஏற்பாடு செய்யவேண்டும்.

உலகமளாவி நடைபெறும் நவீன ஆயுத சாதனங்களின் உதவிகொண்டு நடைபெறும் யுத்தத்தில் யுத்த தந்திரங்களில் எதை முன்னதாகச் செய்யவேண்டியது என்பதை நிர்ணயம் செய்வதுதான் புத்திசாலித்தனம். இதுவரையில் பிரிடனின், கடல் மார்க்கங்கள், மத்தியக்கிழக்கு, ஸூயஸ் கால்வாய் முதலியவைகளின் தற்காப்புகளுக்காகத்தான், விமானங் களின் உற்பத்தி, பங்கீடு, உபயோகித்தல் முதலியவைகளில் முதன்மையான கவனம் செலுத்தப்பட்டது. இந்த யுத்த முறை இப்பொழுது இருக்கும் நிலைக்கு உபயோகப்படாது. மூன்றுவருஷ யுத்தங்களுக்குப் பிறகு நாம் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டோம். ஆயுத பலமும் நம்மிடம் மிகுதியாகயிருக்கிறது. எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் வலிமையுடன் தாக்குவதற்கு நமக்குப் போதுமான விமானங்களும் டாங்கிகளும், கப்பல் களுமில்லையென்பது வாஸ்தவம். ஆகிலும் அடுத்தபடியாக எந்த இடத்தில் முன்னேற்ற யுத்தம் ஆரம்பிக்கவேண்டுமென்பதை நாம் நிர்த்தாரணம் செய்யக்கூடும்.

## இதாலி அழிந்துவிட்டது.

நாம் செய்யவேண்டியது தெளிவான விஷயம். ஜெர்மனியையும், இதாலியையும் பலமாகவும், தொடர்ச்சியாகவும் வெடி விமானங்களால் தாக்கவேண்டும். டூரின், ஜினோவா, மிலான் போன்ற இடங்களை நமது வெடி விமானங்கள் சமீப காலத்தில் பலமாகத் தாக்கிய திலிருந்து அநேக விமானங்கள் மூலம் வெடிகுண்டுகள் வீசித் தாக்குதல் செய்வதின் நஷ்ட விளைவின் பரிமாணம் நன்ருக வெளியாகிவிட்டது. நாம் இரவில் செய்துவரும் தாக்குதல் களுக்கு உதவியாக அமெரிக்க விமானங்களும், பகல்காலத்தாக்குதல்களைச் செய்துவருகின்றன. இதன் பூரா விளைவுகள் காலக்கிரமத்தில்தான் வெளியாகும். ஆகிலும் நாசம் விளைவிக்கக் கூடிய இந்தக் தாக்குதல்களிலிருந்தும் இதாலிய ஜனங்களின் மனப்பான்மை தளர்ச்சியடைந்து விட்டதென்பது தெளிவாகத் தெரியவருகிறது.

நாட்டைவிட்டு ஓடவேண்டிய துர்தசையும் இதாலிக்கு ஏற்பட்டுவிட்டது. இதிலிருந்து ஸப்ளைகள் வாசஸ்தலங்கள், போக்குவரத்து வசதிகள், இவைகளுக்கும் அதிகச்சிரமம் உண்டாகும். மேலும், மிதமாக மதித்துப் பார்த்தாலும் வெடி விமானங்களின் தாக்குதல் களிலிருந்து பொருள் சேதம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஜினோவா துறைமுகம் மூடப்பட்டுவிட்டதென்று அச்சுநாடுகளே ஒப்புக்கொள்ளுகிருர்கள். வேவுபார்க்கும் விமானங்கள் பிடித்த போடோ படங்களைப் பார்த்தல் இதாலியின் யுத்த உற்பத்தியில் ஈடு பட்ட முக்கியமான தொழிற்சாலைகள் நாசமாகிவிட்டன என்று வெளியாகுகிறது. விமானங்

களின் இஞ்ஜின்களையும், சாகுபடி மெஷின்களையும், யுத்த தளவாடங்களையும் உற்பத்தி செய்வதில் 50,000 பேர்கள் ஈடுபட்டு வேலை செய்துவந்த ரேனிலுள்ள பியாட் தொழிற் சாலையும், காப்ரானியிலுள்ள வெடி விமான உற்பத்திசாலையும், மாண்ட்கேடினிலுள்ள ரசாயனப் பொருள் உற்பத்தி நிலயமும், லானஸியாவிலுள்ள போக்குவரத்து உற்பத்தி சாலையும், முற்றிலும் நாசமாக்கப்படாதபோதிலும் உபயோகமற்றதாகச் செய்யப்பட்டு விட்டன.

விமானத் தாக்குதல்கள் ஜெர்மனிமீது உக்ரமாகவும், தொடர்ச்சியாகவும் நடைபெற்றிருக் கின்றன. சென்ற எட்டுமாதங்களில் மேற்கு ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலைகளையும், துறைமுகங்களையும் மின்னல் வேகத்துடன் நமது விமானப்படை தகர்த்திருக்கிறது. 1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் முதல் 1941-ம் வருஷம் மே மாதம் வரையில் ஜெர்மன் விமானப்படை இங்கிலாந்தைத் தாக்கியதைவிட நமது தாக்குதல் அதிக பலமானது.

விமானத் தாக்குதலினின்றும் ஏற்பட்ட விளைவுகள், பூராவாக இல்லாதபோதிலும் மதிக்கக்கூடிய நிலையிலிருக்கின்றன. கீழ்க்கண்ட தகவல்களும் புள்ளி விவரங்களும் கவனிக்க முள்ளவை. லண்டன் மாநகரத்தில் சுமாராக 120 ஏக்கர் பிரதேசம் பழுதாக்கப்பட்டது. அதாவது, முற்றிலும் நாசமடைந்தோ அல்லது பழுது பட்டோ இருக்கிறது. பாக்கியிருப் பவைகளையும் இடித்துத் தள்ளிவிட்டு கட்டடங்களை புதிதாகக் கட்டவேண்டியது தான். கொலோனில் 600 ஏக்கர் பிரதேசம் நாசமாகிவிட்டது. நகரத்தில் 40 சத விகிதம் பாழாகி விட்டதென்று ஜெர்மானியர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

### நஷ்ட விபரம்.

கொலோன் போன்ற பன்னிரண்டு நகரங்கள் நாசமாகிவிட்டன. டஸ்ஸல்டார்ப்பில் 380 ஏக்கர் வரை பாழாகிவிட்டது. இங்கே கோலோனைவிட தொழிற்சாலைகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் தொழிற்சாலைகளெல்லாம் இந்த நகரத்தில் வைக்கப்பட் டிருந்தன. கார்ல்ஸ்ரூகி என்னுமிடத்தில் 300 ஏக்கரா கொண்ட மத்தியப் பிரதேசமும் இன்னும் பல்வேறு இடங்களும் சேதமடைந்தன. லூபக்கில் 270 ஏக்கரா கொண்ட பிரதேசம் நாசமடைந்தது. ராஸ்டாக்கில் 130 ஏக்கராகொண்ட பிரதேசம் தீக்கிரையாகிவிட்டது. மற்ற இடங்களிலும் சேதம் அதிகம். மெயின்ஸ் என்னுமிடத்தில் 135 ஏக்கராவும், எம்டன், டுயிஸ்பர்க், ப்ரமென், சூகன், ஹாம்பர்க் முதலிய இடங்களிலும் சேதமேற்பட்டன.

இந்த விபரங்கள் அரைகுறையானவை. சென்ற எட்டு மாதங்களில் பிரிடிஷ் விமானப் படை விளைவித்திருக்கும் ஏராளமான ஜெர்மன் ஆயுத உற்பத்தி தொழிற்சாலை நஷ்டக்கணக் கைப்பற்றி இது அரைகுறையான தகவல். மார்ச்சு முதல் ஆகஸ்டு முடிய ஆறு மாதங்களுக்குள் 3,22,000 ஜெர்மன் வாசஸ்தலங்கள் பூராவும் தகர்த்துவிட்டன. அல்லது வாசத்துக்கு லாயக்கில்லாமல் போய்விட்டன. விமானத் தாக்குதல்களின் பயனாக 6,45,000 ஜனங்கள் வீடுகளில்லாமல் தவிக்கிறார்கள். இந்தக் கணக்குகளில் சென்ற மூன்றுமாத நஷ்டக்கணக்கு சேர்க்கப்படவில்லை. ஜெர்மனியின் தொழிற்சாலைகளுள்ள ஸ்தாபனங்களுக்கு ஏற்பட்ட நாசத்திலிருந்து ரூர், ரைன்லாந்து பிரதேசங்களிலிருக்கும் தொழிலாளர்களின் மனப் பான்மை தளர ஆரம்பித்துவிட்டதென்று தெரியவருகிறது. அகதிகளைப் பாதுகாப்பதிலும், அவர்களுக்கு ஆடைகளும், ஸ்தலவசதிகள் அளிப்பதிலும் நாஸிகள் செய்துவரும் பிரயத்தனம் மிகவும் அதிகரித்துவிட்டது என்றும் வெளியாகுகிறது. மேலும் வாலிபமும், திறமையும், தீரமும் பொருந்திய மனிதர்கள் அநேகர் உயிர்துறந்து விட்டார்கள். இது விசனிக்கத் தக்கதுதான். விளைந்த நஷ்டங்களோடு ஒப்பிட்டால் ஆள் சேதம் அதிகமில்லை. ஐரோப் பாவில் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்பொழுது ஏற்படக்கூடிய நஷ்டத்துடன் ஒப்பிட்டால் மிகவும் அல்பமானது.

### ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டம்.

விமானப்படையெடுப்பினின்றும் ஜெர்மனிக்கு ஏற்பட்ட சிரமத்தை நாம் மறந்து விடுகிறோம். பிரிடனை ஜெர்மன் விமானங்கள் தாக்கியபொழுது நமது தொழிற்சாலைகளின் உற்பத்தியானது கொஞ்சம்கூட பாதிக்கப்படவில்லையென்பது போலவே ஜெர்மனியை பிரிடிஷ் விமானப்படை தாக்கியதிலிருந்தும் ஜெர்மனியின் யுத்த முயற்சி பாதிக்கப்படாது என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இது தப்பான அபிப்பிராயம். இரு தேசத்திலுள்ள சந்நிவேசங்களைச் சரியானபடி மதித்துப் பார்க்கவேண்டும். 1940-ம் வருஷத்திலும் 1941-ம் வருஷம் முதல் பாதியிலும் பிரிடனுடைய தளவாட உற்பத்தி ஆரம்ப தசையிலிருந்து வந்தது. ஏராளமான அலுவல்களைச் செய்யவேண்டியிருந்தது. ஸ்தலங்களை சுத்திசெய்

யவும், கட்டடங்களைத் தகர்க்கவும் தொழிலாளர்கள் ஏராளமாக வேண்டியிருந்தது. சமாதான காலத்துக்காக வேலை செய்துவந்த தொழிற்சாலைகளையெல்லாம் யுத்த தளவாட உற்பத்தி செய்வதற்காகத் திருத்தியமைக்கவேண்டியிருந்தது. பழுதுப்பட்ட தொழிற்சாலைகளுக்குப் பதிலாக வேறு சாலைகள் ஏற்படுத்தவேண்டியிருந்தது. மேலும் நாட்டைவிட்டகன்றவர்களுக்கும் அகதிகளுக்கும் வசிப்பதற்கு லாயக்கான காலி வீடுகளும் ஏராளமாகயிருந்தன.

ஜெர்மனியின் நிலைமை நேர் விரோதமானது. மின்னல் படையெடுப்பு ஆரம்பித்த பொழுது ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலைகளெல்லாம் சோர்வடைந்து விட்டன. தொழிலாளர்களின் குறைவு ஏற்பட்டிருந்தது. போக்குவரத்து சாதனங்களில் சாமான்கள் ஏராளமாகச் சென்றன. ஆடைகளும் மர சாமான்களும் அற்றுப்போய்விட்டன. ஆகையால் வெடி குண்டு வீச்சுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள ஜனங்களுக்கு ஆடை வசதி அளிப்பது என்பது ஜெர்மனிக்கு முக்கியமான பிரச்னை.

**பத்து சத விகிதம்.**

ஆகையால் தான், ஜெர்மனியையும், இதாலியையும் பலமாக வெடி குண்டுகளால் தாக்க வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். இந்த அபிப்பிராயத்தை நாம் மனதில் இறுத்தி வைக்கவேண்டும். வெடி குண்டுகள் மூலம் தாக்குதல் செய்தால் மட்டும் யுத்தத்தில் வெற்றி பெறலாமென்று நான் சொல்லவில்லை. யுத்தத்தில் புதிய முன்னேற்ற முறைகளைக் கையாளப்போகும் சமயத்தில் விமானப்படை பலத்தின் உபயோகம் அவசியமென்று நாம் கருதுகிறோமா என்பது தான் என்னுடைய கவலை. அச்சு நாட்டார்களை எதிர்ப்பதில் வெடி குண்டு பொழிவுடன் நின்று விடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நம்முடைய விமானப்படை பூராவையும் வெடி குண்டு வீசுவதில் உபயோகிக்கவேண்டுமென்றும் நான் வற்புறுத்தவில்லை. ஆகிலும் ஜெர்மனியைத் தாக்குவதில் பிரிடனின் முதல்தரமான விமானப் படையில் பத்து சத விகிதத்தை மட்டும் உபயோகித்து ஏராளமான வெற்றிகள் பெற்றேன் என்று சமீப காலத்தில் விமானப்படை மார்ஷல் ஸர் ஆர்தர் ஹாரிஸ் விடுத்த அறிக்கையை ஒருவம் ஆக்ஷேபிக்கவில்லை. நிச்சயமாக ஜெர்மனியைத் தாக்கும் விஷயத்தில் நாம் போதுமான அளவு விமானப்படையை உபயோகிக்கவில்லை என்று சொல்லலாம். பிரிடனுடைய முதல்தர விமானப்படையில் 75 அல்லது 50 சத விகிதம் இல்லாவிட்டாலும் குறைந்த பக்ஷம் 30 சத விகிதமாவது ஜெர்மனியையும் இதாலியையும் தாக்குவதில் உபயோகப்படுத்தவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

---

## ஆபிரிக்கா வழியாகச் செல்லும் விமான மார்க்கம்.

(மத்தியக்கிழக்கு ரிவியூ பேபர்).

மத்தியக்கிழக்குக்கும், இந்தியாவுக்கும், ருஷ்யாவுக்கும், சைனாவுக்கும் சாமான்கள் கொண்டுபோவதற்கு முக்கியமான ஆபிரிக்கா விமான மார்க்கமானது ஏழு வருஷங்களுக்குமுன் பிரிடிஷாரின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மார்க்கம் நைஜிரியாவிலிருந்து மத்தியரேகையிலுள்ள பிரெஞ்சு ஆபிரிக்கா மூலம் கார்டூமுக்குச் செல்லுகிறது. இந்தப் பாதை சமாதான காலத்தில் போக்குவரத்துக்காகப் போடப்பட்டது.

இப்பொழுது கிழக்கு தேசங்களுக்கு முக்கிய விமானமார்க்கமாயிருக்கும் இந்தப் பாதையானது 1936-ம் வருஷம் ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வருஷத்தில் அக்டோபர் மாதத்தில் கார்டூமிலிருந்து விமானம் புறப்பட்டு 3,500 மைல்களுக்கப்பாலிலுள்ள அட்லாண்டிக் சமுத்திரக்கரையிலுள்ள நைஜீரியாவுக்குப் போய்ச்சேர்ந்தது. இந்த மார்க்கம் ஆரம்பித்தபொழுது அதிகச்சிரமங்கள் ஏற்பட்டன. சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பிரிடிஷ் விமானிகளுக்கு அந்த நாளில் திசைக்காட்டும் கருவியும் காற்றுப்போக்கைக் குறித்துக்காட்டும் கருவியும்விமானங்களில் வைக்கப்படவில்லை. ஏராளமான கரையான் புற்றுகளும், மணல் காற்றுகளும் திடீரென உண்டாகி கண்நோக்கத்தை 30 கஜத்துக்குக் குறைவான ஸ்தலத்துக்குள்ளாகக் குறைந்து விட்டன. ஆரம்பத்தில் விமானம் ஓடும் பாதைகள் 700 கஜங்கள் தூரம்தான் போடப்பட்டன. மேற்கு ஆபிரிக்காவில் தேனிக்களின் தொந்தரவுகள் அதிகமாகயிருந்தன. விமானங்களில் உபயோகப்படுத்தப்பட்ட பெட்ரோலின் வாசனையைக்கொண்டு அவைகள் கூட்டம் கூட்டமாக வந்துவிட்டன. பாதுகாப்புக் குடிசைகளிலுள்ளவர்களைச் சிங்கம் முதலிய துஷ்டமிருகங்கள் அணுகாதபடி சிறிய அக்னி ஜ்வாலையையும் வளர்த்து வரவேண்டியதாயிற்று.

### நிறந்தரமான போக்குவரவு.

இதாலி யுத்தத்தில் சேர்ந்துகொண்ட பிறகு மத்தியதரைக்கடல் மார்க்கம் அடைபட்டு விட்டது. மேற்கு ஆபிரிக்காவுக்கு நிறந்தரமான போக்குவரவு ஏற்பாடுசெய்யப்பட்டு லாகாஸிலிருந்து கெயிரோவுக்குப் போகும் மார்க்கத்துடன் பிணைக்கப்பட்டது. மேற்கு ஆபிரிக்காவிலுள்ள பிரிடிஷ் விமானப்படை உலகத்திலேயே மிகுதியான விஷம்பொருந்திய கடற்கரைப் பிரதேசத்தில் தளங்களை ஏற்படுத்தி, மணல் பிரதேசத்திலும் புதர்களிருக்குமிடத்திலும் ஒருபாதைகளை உண்டாக்கி, தெற்கு அட்லாண்டிக் சமுத்திரத்தில் யூபடகுகளின் நடமாட்டம் அதிகமாயிருந்த போதிலும் புதிய படைகளை அனுப்புவதற்கு வசதியேற்படுத்தியதால்தான் எட்டாம் படை மேற்கு முகமாக முன்னேறிற்று. பிரிடிஷ் விமானப்படை தன்னுடைய அலுவல்களை அதிவேகமாகச் செய்துவந்தது. சாமான்களை இறக்கிய பிறகு 12-மணி நேரத்திற்குள்ளாகவே விமானிகள் தங்கள் விமானங்களைச் சரிப்பார்த்து, பிறகு ஒன்று அல்லது இரண்டு மணிக்குள்ளாக யுத்த களத்துக்கு சாமான்கள் கொண்டுபோவதற்காகப் புறப்பட்டுவிடுவார்கள்.

### அபாயகரமான பாதை.

விமான மார்க்கமானது கடற்கரையோரமாகச் சென்று, விஷி நாடுகளின் வழியாகச் சென்று, வடக்குமுகமாக நைஜீரியாவுக்குச்சென்று அங்கிருந்து சாட் ஏரிக்குப் போகிறது. இவ்விடத்தில் ஸ்வதந்திர பிரெஞ்சுப்படைகள் குவிந்து நிற்கின்றன. இந்த இடத்துக்கும் ஸூடானுக்கும் நைல்நதி மார்க்கமாக கெயிரோவுக்குச் செல்லும் மார்க்கத்துக்கும் இடையில் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான பூமத்திய ரேகையிலுள்ள பாலைவனமும் காடுகளுமிருக்கின்றன. சில இடங்களில் பிரெஞ்சு குடியேற்ற நாடுகள் உபயோகப்படுத்திய விமான தளங்களுமிருக்கின்றன.

இந்தப் பிரதேசத்தில் இருக்கும் விமானமிறங்குமிடமென்பது சில ஓடுபாதைகளுள்ளதும், அந்த நாட்டு மக்கள் காட்டுமத்தியிலும், புதர் மத்தியிலும் வசித்துவரும் சிறிய குடிசைகளுள்ளதும்தான். காற்றின் போக்கை அனுசரித்து ஒரு பக்கமாகச் செல்லக்கூடிய ஒரு பாலம்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சில விமானம் இறங்குமிடங்கள் அடர்ந்த காடுகளை அழித்து அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றவைகள் நவீனமுறையில் ஏற்பாடாகியிருக்கின்றன. ஆயிரக்கணக்கான விமானங்கள் இறங்கி வெளியேறியிருக்கும் ஒரு விமான தளத்திலுள்ள ஆபரேஷன் அரையும் விமானதள கண்ட்ரோல் ஆபீஸும் ஹரிகேன் விமானங்களை மூடிவைக்கும் பெட்டிகளிலிருந்து உண்டாக்கப்பட்டிருந்தது.

மேற்கு ஆபிரிக்கக் கரையிலுள்ள ஒரு கிராமத்திலிருந்துதான் மத்தியக் கிழக்குக்கும், ஸிரியாவுக்கும், இரானுக்கும், ருஷ்யாவுக்கும், இந்தியாவுக்கும் நேசதேசத்தார்கள் அனுப்பும் ஸப்ளைகள் புறப்படுகின்றன. இந்த கிராமத்தில் ஏராளமான விமானங்கள் சதாகாலமும் வட்டாரமிடுகின்றன. தெற்கு அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் நடமாடும் யூ படகுகளை இடைவிடாது தாக்குவதற்கும் இந்த கிராமம் தளமாக உபயோகப்படுகிறது.

---

## ஸர் ஆர்ச்சிபால்டு ஸிங்களேர்.

(அப்ஸர்வர் பத்திரிகை).

20 வருஷங்களுக்கு முன் ஒரு இளம் வயதுடைய ஹைய்லண்ட்ஸின் லிபரல் கக்ஷியைச் சேர்ந்த ஒருவர் ஹவுஸ் ஆப் காமன்ஸில் தன் முதல் பேச்சை பேச எழுந்தார். அவர் பெயர்தான் ஸிங்களேர் என்பது. 1922-ம் வருஷத்தில் நடந்த பொதுத் தேர்தலில் கெய்த்னெஸ் பகுதிக்காய் நின்ற ஏற்கனவே பார்லிமெண்டில் அங்கத்தினராய் இருந்தவரைத் தோற்கடித்தார். அவர் கக்ஷியின் தலைவர்கள் எல்லாம் பிற்காலத்தில் முன்னுக்கு வருவான் என்று பேசிக்கொண்டனர். அவருடைய யுத்த அனுபவம் நீண்டதாயும் வீரத்தோடு கூடியதாகவும் இருந்தது. அவர் சொந்த நகராகிய கெய்த்னெஸ்ஸில் லெப்டினென்ட் பிரபுவாயிருந்ததாலும், தர்ஸோவில் ஸிங்களேர் வம்சத்தில் நான்காம் பிரபுவாய் இருந்ததாலும், அந்த கெய்த்னெஸ்ஸில் எல்லோருக்கும் இவரைத் தெரிந்திருந்ததே தவிர மற்ற இடங்களில் எங்கும் இவரைத் தெரியாமலே இருந்தது.

அந்த சமயத்தில் இவரது முதல் பேச்சு பிறருடைய கவனத்தை கவரவில்லை. அது செவிகளுக்கு நல்ல விருந்தாய் இருந்தது. ஆனால் இன்னும் 9 வருஷங்கள் கழித்துத் தான் 1931-ம் வருஷத்தில் ஆர்ச்சிபால்டு ஹென்ரிமேக்டொனால்டு ஸிங்களேர் ஸ்காத்லாந்தின்

சிகிரெட்ரியாக முடிந்தது. அவர் பேச்சின் விஷயங்களைக் காட்டிலும், அந்தப் பேச்சின் சாராம்சம் இன்றைக்கும் நமக்கு முக்கியமானதாக இருக்கிறது. யுத்தத்தில் விமானச் சண்டையின் அவசியத்தைப்பற்றி ஸிங்களேர் பேசினுர். அதிலிருந்தே இவர் பிற்காலத்தில் விமான இலாகாவில் இவர் அடையப்போகும் உன்னத ஸ்தானத்தைக் குறிப்பிடுவது போலிருந்தது.

இவருக்கு கழுகைப்போன்று பறப்பதில் விஷயம் தெரிந்தவர். அவருடைய அழகான முகத்திலேயே இது பிரதிபலிக்கிறது. அது இவரின் முன்னேற்றங்களிலிருந்து இவர் ஒரு பெரிய ஸ்திதிக்கு வருவார் என்று தெரியும். இவர் தந்தை ஸ்காத்லாந்தினராயும், தாய் அமெரிக்க மாதாவும் இருந்தனர். இவருக்கு விமானச் சண்டையிலுள்ள ஆர்வத்தினின்றும் அது வெளிப்படுகிறது. அவர் வாழ்க்கையிலும் அவர் விமானியாகி வரவர நல்ல ஸ்திதிக்கு உயர்ந்துகொண்டே போனுர். கொஞ்சம்கூட தவருமல் நன்னெறியுடன் நடந்து உத்தியோகத்திலும் நல்ல பெயர் வாங்குகிருர்.

15 வருஷங்களுக்கு முன்பு தன் அதிர்ஷ்டங்களையெல்லாம் இழந்த லிபரல் கக்ஷியில் அங்கத்தினராய் இல்லாமலிருந்தாராளுல், இவர் சில காலத்திற்கு முன்பே மேன்பதவியை அடைந்திருப்பார். திறமையான அபிவிருத்தியோடுகூடிய பேச்சாளியாயும், சாதிக்கத் தகுந்த கொள்கைகளையுடைய ராஜீயக் கக்ஷியினராயும் நிர்வகிக்கும் திறமையோடுகூடிய நிர்வாகியாகவும், பார்லிமெண்டில் நடக்கும் தர்க்கங்களில் உற்சாகத்தையளிக்கும் சக்தியுடையவருமாயும் இவர் இருந்தார். மனத்திருப்தி செய்யக்கூடியவரும், பணிவுடையவருமான சிலர் லிபரல் கக்ஷியினராய் கடைசி வரையில் ஆர்வத்துடன் இருக்கிருர். அவருக்கு மேன் பதவி 1931-ம் வருஷத்தில் சொற்ப காலத்திற்கு ஏற்பட்ட பொருளாதார கஷ்டத்தை சமாளிக்க கக்ஷிகளும் ஒன்று பட்டபொழுதுதான். இவர் ஸ்காத்லாந்தின் விஷயங்களை கவனிக்கும் மந்திரியாக ஆனுர். அந்த அந்தஸ்தான உத்தியோகத்தில் சொற்ப காலமே தான் அவர் இருந்தாலும் இன்றைக்கும் அச்சத்தோடு நினைக்கப்படுகிருர்.

ஸிங்களேருக்கு இடம் வேலைக்குத்தகுந்தாற்போல் புத்திசாலித்தனமாய் நடந்துகொள்வார். ஒரு விமர்சகர் சொல்வது போல் "அதன் காரணம் அவருக்கு கெல்ட்டுகளைப்போன்ற புத்திசாலித்தனம் யிருப்பதேயாகும்" இந்த வார்த்தை அடுக்குகள் வேண்டுமென்றே தவறுதலாய் பிரயோகிக்கப்படுகிறது. ஆனுல் ஆர்ச்சிபால்டின் மலைப்பிரதேசத்தின் பழக்க வழக்கங்கள் அவர் வாழ்க்கையில் அதிகமாய் பாதித்திருக்கிறது என்பது மட்டும் உண்மை.

20 வருஷங்கள் இடைவிடாது நல்ல திறமையோடுகூடிய விமானியாயிருந்த காரணத்தால் இவர் மந்திரி சபையில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதனுல் இவர் விமான மந்திரியாய் வெகு காலம் சுருசுருப்பாய் வேலைபார்த்தார். இன்னும் என்ன மேன் பதவி கிடைக்குமென்று யாரால் சொல்லமுடியும்.

மேன்பதவி கிடைக்கும் என்பது மட்டும் உண்மை. நல்ல மேன்பதவிக்காகவே தான் ஸிங்களேர் பிறந்திருக்கிருர். அவருக்கு 52 வயது தான் ஆகிறது. அவரின் வாழ்க்கை சரித்திரத்திலே இன்னும் எவ்வளவோ தீரச்செயல்களைப் பற்றி எழுதவேண்டியது பாக்கியிருக்கிறது.

---

# அரக்கானில் யுத்த நடவடிக்கைகள்.

## இந்திய, பிரிடிஷ் துருப்புகளிடையேயுள்ள சிநேகபாவம்.

தற்கால யுத்த நடவடிக்கைளில் நம் துருப்புகளுடன் அரக்கானில் வெகுகாலம் இருந்த பிற்பாடு இந்திய, பிரிடிஷ் துருப்புகளிடையே ஏற்பட்டுள்ள சிநேக பாவம் நாளுக்கு நாள் அதிகப்படுவதை நான் என் சொந்த அனுபவத்தில் நேரிடையே பார்த்திருக்கிறேன் என்று இந்தியச் சேனையின் பார்வையாளர் கூறுகிருர். இப்பொழுது இருவரும் யுத்தத்தில் ஒன்று சேர்ந்து உழைக்குங்கால், இருவருடையேயுள்ள மரியாதையும், பரஸ்பர அன்பும் ஒரு புது மாதிரியாக உச்சஸ்தானத்தை அடைந்திருக்கிறது.

சுபேதார் போன்ற சிலர் ஜப்பானிய உத்தியோகஸ்தரின் பிணத்தை நான்கு மைல் தூரம் இழுத்து வந்தும், தானே அவர்களிடம் பிடிபட்டும் தப்பிவந்து மரத்தின்மேல் ஏறி ஒளிந்துகொண்டு மிகவும் முக்கியமான தகவலைச் சேகரிக்கத்தக்க "மிக உயர்ந்த பலரும்" இருக்கின்றனர் என்று ஒரு பிரிடிஷார் விவரிக்கின்ருர்.

இந்திய ஜவானும், ஒரு பிரிடிஷ் ஸோல்ஜரைக்கண்ட மாத்திரத்தில் சந்தோஷமாய் "பகூத் அச்சா" என்று வரவேற்கிருன். அவனேடு கொஞ்ச நேரமும் வெறுப்பின்றி சிரித்து

விளையாடுகின்றான். விளையாடும் முறையானது பாஷையில் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்து, இந்தியத் துருப்புக்கார ஜவான் செய்யும் வேடிக்கைகளை நன்றாய் புரியும்படி செய்கிறது. இவைகளைப் பொறுத்த வரையில் ஒருவர் பாஷையை ஒருவர் அறிந்து கொள்வதானது மிகவும் வியப்பையே அளிக்கிறது. பாஷை இலக்கணமற்றதாய் இருக்கலாம். ஆனால் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவேண்டியதைப் பேசிக்கொள்ளுகின்றனர்.

நகரங்களிலே பல வருஷங்கள் வசித்து, சினிமா படங்களுக்கு வாரம் ஒருமுறையோ, இருமுறையோ சென்று வேடிக்கை பார்த்தும், அன்றாடம் சமாசாரப் பத்திரிகைகளை வாசித்தும், அந்தப் பழக்கங்களிலேயே ஈடுபட்டவர்கள் பலர் சில வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ வேறுவிதமான வாழ்க்கைக்கு பழக்கப்படுத்திக்கொள்ளக்கூடும். அத்தகைய வாழ்க்கையில் சிரமம் இருப்பதாகத் தெரியாதபடி நடந்து கொள்ளுகின்றனர். இது பிரிடிஷாருக்கே பெரும்பாலும் அனுபவிக்கும். இந்தியர்களும் சில சமயங்களில் தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ளவேண்டி வந்தது. அவர்களும் அக்காரியத்தை சாதித்திருக்கிறார்கள். எங்களில் சிலர் சினிமாப் படத்திற்கு சென்று சில மாதங்கள் ஆயின. சமாசாரப் பத்திரிகைகளும் கிடைப்பதில்லை. அப்படிக்கிடைத்தால் மிகவும் பழையதோர் பத்திரிகையாய் இருக்கும். அநேகமாய் நம்முடைய பழைய பழக்க வழக்கங்கள் எல்லாம் இப்பொழுது தடை செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நாங்கள் ஒரு குதூகலமான கூட்டமாகவே இருக்கிறோம். சமாசாரங்களைப் பொருத்த வரையில் துருப்புகளின் சஞ்சிகை தவறாமல் கொடுப்பது ஒரு உற்சாகமான விஷயமாகும்.

**மிகவும் முக்கியமான விஷயம்.**

சேனையைச் சேர்ந்தவர்களின் அந்தரங்க வாழ்க்கையின் முக்கியமான விஷயம் அவர்களுக்குத் தபால் கிடைப்பதேயாகும். சில நாட்களுக்கு முன்பு ஜப்பானியர்கள் தங்கியிருக்குமிடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் தபால்களை அவர்களுக்கு கொடுப்பதைப் பார்த்தேன். சில நேரம்வரை அவர்கள் ஜப்பானியர்களை மறந்தனர், சண்டையை மறந்தனர், தங்கள் தங்கள் வீட்டு சமாசாரத்திலேயே லயித்துப்போயிருந்தனர். சிறிது நேரங்கழித்து தீரமான வீரர்களாய் மாறினர்.

தபால்களுக்கடுத்தாற்போல அவர்களுக்கு மிகவும் ஆறுதலளிக்கத் தகுந்தது தேநீரும், சிகரட்டுகளுமே. நல்ல சூடான தேநீர் சென்ற யுத்தத்தை ஜயிப்பதற்கு தகுந்த உதவியாயிருந்தது என்று சிலர் கூறினார்கள். இந்த யுத்தத்தை ஜயிப்பதற்கு தேநீர் நிச்சயமான உதவியளிக்கும்.

நம் துருப்புகள் ஜப்பானியர்களைச், சண்டையில் ஈடுபடாதவர்கள் கூறுவதுபோல மனிதக்குரங்குகளாக மதிக்காமல் கெட்டிக்காரத்தனமும் ஊக்கமும் நிறைந்த எதிரிகளாகவே பாவிக்கின்றனர். அவர்களைத் தோற்கடிப்பது நம்மவர்க்கு ஒரு பெரிய வெற்றியேயாகும். இத்தகைய கொள்கை எப்பொழுதும் பாதுகாப்பானதேயாகும். ஒரு பயங்கரமான விரோதியை இளப்பமாய் நினைப்பது, நமக்குக் கெடுதலையும் அழிவையும் தேடிக்கொள்வதேயாகும்.

மாயு தீபகற்பத்தில் மணிக்கணக்காய் நடந்த இதுவரை காணாததும் கேள்விப்படாததுமானதொரு பெரிய தாக்குதலை ஜப்பானியர் சமாளித்துச் சண்டையிட்டபொழுது, ஒரு சேனை வீரன் மற்றவனிடம் பின்வருமாறு கூறக்கேட்டேன் "ஜப்பானியர்களைத் தோற்கடிப்பதற்கு நல்ல நரம்புவேண்டும். இன்னும் இவர்கள் இப்பொழுது ஓடிவிடாவிட்டாலும் கடைசியில் அவர்கள் ஓட்டமெடுக்கும்படி நாம் செய்வோம்."

சண்டை செய்வதுபோல் வாய்ச்சண்டை போடுவதிலும் ஜப்பானியர் கெட்டிக்காரர்கள் என்பது நான் கண்டுபிடித்த மற்றொரு விஷயமாகும். உத்தரவுகள் உயர்ந்த தொனியாலே சப்தமிடப்படுவதையும், சத்தத்தோடுகூடிய பேச்சுகளையும் கேட்கலாம். ஆனால் ஒளிந்து கொள்வதிலேயோ அல்லது மறைந்து நிற்பதிலேயோ தான் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள் ஜப்பானியர். பகலிலும் இரவிலும் ஜப்பானியர் ஒரு தந்திரமான விரோதிதான். இரவில் நடக்கும் உபாயங்களில் பின்னால் சொல்வது ஒன்று; யார் தன்னை எதிர்க்கின்றனர் என்பதை காட்டிலே கண்டுகொண்டால் "சுடாதீர்கள். நான் உங்கள் கக்ஷிதான்" என்று கத்துவார்கள். யாராவது பதில் கூறினால் அவர்கள் குண்டின் வாய் நெருப்பிற்கு இறையாக வேண்டியதுதான்.

அல்லது ஜப்பானியர், ஆங்கிலத்திலோ, உருதிலோ, வங்காளத்திலோ, ஏதாவது ஒரு பாஷையில் உத்தரவுகள் கொடுக்கலாம். இவைகள் எல்லாம் "நம்பர்........செக்ஷன் எதிர்க்கும்" என்ற முடிவான தொனி இவ்விதம் எதிரியின் காதில் விழும்படி கூறிவிட்டு ஒரு அடிகூட முன்வைக்காமல் எதிரிகளை ஏமாற்றிவிட்டு சுடுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பார்கள்.

பொதுவாகச் சொல்லுமளவில், வெடிவிமானங்களும் சண்டை விமானங்களும் வட்டாரமிடு வதை தவிர வேறு விதமான உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஒன்றும் இங்கு கிடையாது. எதிராளி இருக்கும் இடத்திற்குக் கொஞ்ச தூரத்தில் அவனைப் பார்க்காமலேயே எதிரியை வளைப்பதும் வட்டாரமிடுவதுமாக வெகுகாலம் போக்கிவிடலாம். இந்த மலைக் குன்றுகளில் உள்ள காடுகளில் அநேக இரகசியங்கள் புதைந்து இருக்கின்றன. சாலைகூட அங்கு இருக்கிறது. சிறிய தோட்டாக்களும் அடிக்கடி சப்தமிடும் துப்பாக்கிகளும், அடுத் தடுத்து சுடும் சட்டி பீரங்கிகளும், புதுமாதிரியான சப்தங்களை உண்டாக்குகின்றன: ஆனால் இயற்கை காட்சியின் மிகுதியால் கண்களுக்கு ஒன்றும் புலப்படுவதில்லை. அங்கிருக்கும் துருப்புகளும் மறைந்திருக்கும் பாடங்களை புத்திசாலித்தனத்தோடும் செல்வதையும் அனுஷ் டித்து வருகிறார்கள்.

---

# ஜப்பானியர்கள் அமானுஷமானவர்கள் என்பது பொய்.

ஜப்பானுடைய ராஜீய—மதசம்பந்தமான கொள்கையென்று சொல்லக்கூடிய ஷிண் டோயிஸம் என்பது சக்ரவர்த்தியை ஸ்தோத்திரம் செய்வதுதான். அதாவது ஜப்பானிய சக்ரவத்தியானவர் தெய்வப் பிறப்பு என்று பொதுஜனங்கள் கொண்டாடவேண்டுமென்று வற்புறுத்துவதுதான். பிரசாரகர்கள் ஜாக்கிரதையுடன் விளம்பரம் செய்துவருவதும் குறை கூறாமல் மற்றவர்கள் ஒப்புக்கொள்ளுவதுமான ஜப்பானியர்களின் வலிமையின் அபத்தமானது வெளியாகிறது. ஜப்பானியத் துருப்புகளின் ஆச்சரியமான குணாதிசயங்களைப்பற்றி அநேக கதைகள் வெளியிடப்படுகின்றன. ஒளிந்து சுடுவதில் அவனுடைய சாமர்த்தியமும் காட்டு மார்க்கங்களில் சத்தமில்லாமல் சென்று, முன் அறிவிப்பன்னியில் எதிரியை விலாப்பக்கத்தில் அடிக்கும் சக்தியும், இராக்காலங்களில் யுத்தம் செய்ய அவனுடைய அபிலாஷையும், அவனுடைய மதவெறியும் இன்னும் அநேக குணங்களும் சிலாகிக்கப்படுகின்றன.

### ஜப்பானியச் சிப்பாய்.

ஒரே மூச்சாக எதிர்க்ககூதியில் நின்றுகொண்டு ஜப்பானியச் சிப்பாயிடம் குணங்களே இல்லை என்று சொல்லுவதில் பிரயோஜனமில்லை. அவன் நல்ல யுத்தவீரன் என்பதை மறுக்கமுடியாது. சரண் அடைவதைவிட உயிர்துறக்கும்வரையில் சண்டைசெய்வான். அவனுடைய முன்னேற்ற யுத்தங்களையும் தைரியத்துடனும், ஊக்கத்துடனும் நடத்துவானென்பதிலும் சந்தேகமில்லை. இத்துடன் நாம் நின்றுவிடமுடியாது. இந்த குணங்கள் சிறந்தவை என்று ஒப்புக்கொண்டாலும், அவைகள் மூலமாகவே ஜப்பானியர்கள் நம்முடைய துருப்புகள் வசம் அகப்பட்டுக்கொண்டு உயிரையும் மாய்த்துக்கொள்ளுகிறார். குடால்கனாரிலும், லோகியிலும், நியூகினியாவிலும், அமெரிக் கத் துருப்புகளும், கடற்படைகளும், ஆஸ்திரேலியத்துருப்புகளும் ஜப்பானுடைய சிறந்த துருப்புகளுடன் காடுகளில் யுத்தம் செய்து வெற்றிபெற்றிருக்கின்றன. சமீப பிரதேசத்தில், அரக்கானில் நடைபெற்ற போரிலும் இந்தியத் துருப்புகள் தைரியத்திலும், யுத்த தந்திரத்திலும் ஜப்பானியர்களைவிட மேன்மையானவர்கள் என்றும் வெளிக்காட்டி யிருக்கிறார்கள்.

இவ்விஷயத்தை நாம் நன்றாய் ஆராய்ச்சிசெய்வோம். ஜப்பானியர்கள் மறைந்து நின்று சுடுவதில் கெட்டிக்காரர்கள் என்று பிரசித்திபெற்றவர்கள். மறைந்திருப்பதிலும் சாமான் களை மறைமுகமாகவைக்கும் ஏற்பாடுகளில் தீரனென்பதும் வாஸ்தவம்தான். ஆகிலும் ஒரு முக்கியமான விஷயம் கவனர்கமுள்ளது. அவன் குறியுடன் அடிக்க சாமர்த்தியமில்லாதவன். சமீபத்திலிருந்தால்தான் அவன் சரியாக லக்ஷியத்தைச் சுட்டுவிடுவான் ஒளிந்துநிற்கும் ஒரு ஜப்பானியனை நம்முடைய துருப்புகளில் இருவரோ அல்லது நால்வரோ கபடமாகக் கண்டு பிடித்து அவனை நாசம் செய்துவிடுவார்கள். உதாரணமாக, நேசநாட்டாரின் எதிர்ப்பு பலம் குறைவாகயிருந்த பொழுது ஜப்பானியர்கள் செய்ததுபோல இப்பொழுது தனிப்பட்ட சண்டை விமானங்கள் வெடிகுண்டு வீசுவதற்கு ஒத்தாசைக்கு அரக்கான் போர்முனைக்கு வருவதில்லை. இப்பொழுது நாஸி யூ படகுகள் போவது போல கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். சில பிரதேசங்களில் நேசநாடுகளின் ஸ்தலங்களுக்குச் சமீபத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் ஜப்பானியரை ஒரு வெடிகுண்டைக்கொண்டு அழித்துவிடலாம்.

### காட்டுமார்க்க யுத்த தந்திரம்.

ஜனங்களுடைய மனதில் மற்றொரு ஏமாற்றமிருந்துவருகிறது. காடுகளில் பூனையைப் போல சப்தமில்லாமலும், திருட்டுத்தனமாகவும் ஜப்பானியன் ஊர்ந்துசெல்லுகிறானும்.

இதுவும் ஒரு பிரமைதான். அவன் இருக்கும் ஸ்தானத்தை அவனுடைய முட்டாள்தனத்தினாலேயே வெளிப்படுத்தி அவன் நாசமடைந்திருக்கிறான். திடீரென்று சப்தம் செய்வதினாலும் பாதுகாப்பு முறைகளில் சாதாரணமானவைகளும் கூட இல்லாததினாலும் இம்மாதிரியான ஆபத்துகள் அவனுக்கு உண்டாகுகின்றன. நேசதேசத் துருப்புகளின் சாமர்த்தியத்தினால் அநேக ஜப்பானியர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நேசநாடுகளின் துருப்புகளிருக்குமிடங்களுக்குப் போகும் மார்க்கங்களில் நரிப்பள்ளம் தோண்டுவது, மார்க்கங்களில் திராக்ஷைக்கொடிகளைப் போட்டு இராக்காலங்களில் நடமாட வசதிசெய்து கொள்ளுவது என்ற முறைகளை நமது துருப்புகள் அநேகம் தடவை கவனித்து வந்திருக்கிறார்கள். இந்த விஷயங்களை நமது ரோந்துப்படைகள் அறிந்து, மறைந்துநின்று இம்முறைகளை உபயோகப்படாமல் செய்துவிடுகிறார்கள்.

## நேசநாட்டாரின் நடவடிக்கை.

ஜப்பானியர்கள் செய்துவந்த நடவடிக்கைகளை எதிர்த்து குலைத்துவிட எல்லாவிதமான ஏற்பாடுகளையும் நேசநாடுகள் செய்திருக்கின்றன. திருட்டுத்தனமாக முன்னேறுவதை பாதுகாப்பு முனைகளின் சாதனத்தினால் கண்டுபிடித்துவிடுகிறார்கள். ஜப்பானியர்கள் சப்தம் போடுவதையும் பொறிகள் அமைப்பதையும் தந்திரமாக கம்பிகள் மூலமாகவும், யந்திர பீரங்கியிலிருந்தும் சட்டி பீரங்கியிலிருந்தும் குண்டுகள் வீசியும் அகற்றி விடுகிறார்கள். முன்னேறும் மார்க்கங்களை பீரங்கிக் குண்டுகள் தாக்குகின்றன.

இராக்காலங்களில் பலமாகத்தாக்கும்பொழுது, நேசதேசப்படைகள் இருக்கும் ஸ்தானங்களுக்கு குன்றுகளின் உச்சிகள் வழியாக ஜப்பானியர்கள் முன்னேறுகிறார்கள். சாதாரணமாக முதலில் சிறிய ஆயுதங்களிலிருந்தும் சட்டி பீரங்கிகளிலிருந்தும் வேட்டுகள் போட்டு, அதிகக்கூக்குரலும் செய்வார்கள். இதற்கப்புறம் தாக்குதல் நடைபெறும். இதே மாதிரியாகத்தான் யந்திர பீரங்கியும் உபயோகப்படுத்தப்படுகிறது. தந்திரமாக தீமூட்டி மார்க்கங்களில் வைப்பதும் தானாகவே வெடிக்கக் கூடிய தற்காப்பு முறைகளை அமைப்பதும், ஸ்தானங்களை தற்காப்பு செய்வதும் நடைபெறுவதன் மூலம் நாம் எதிரியின் தாக்குதல்களை சின்னாபின்னப்படுத்தியிருக்கின்றோம். ஜப்பானியர்கள் அபாயமானவர்கள். பத்திரிகைக்காரர்கள் சொல்லுவதுபோல வெறிபிடித்தவர்களென்றும் சொல்லலாம். ஆகிலும், நிதானமும் நமது பீரங்கிகளின் மேன்மையும் சேர்ந்து ஜப்பானியர்களை முறியடித்துவிடுகின்றன. தென்மேற்கு பஸிபிக் சமுத்திரத்தில் நடைபெற்ற சண்டைகளிலிருந்து இந்த உண்மையை ஜப்பானியர்களும் அறிந்துவிட்டார்களென்று தெரியவருகிறது.

ஜப்பானியர்கள் வெகுகாலம் வரையில் ஆகாரமில்லாமல் ஜீவித்திருப்பார்களென்றும், வியாதிகளையும் அதிவிருஷ்டியையும் சகித்துக்கொள்ள சக்தியுள்ளவனென்றும் மற்றொரு பிரமை இருந்துவருகிறது. இதுவும் வேஷமென்று எதிரிகளே காண்பித்திருக்கிறார்கள். படேவியாவிலிருந்து செய்யப்பட்ட ஒலிபரப்புகளில் "மலேரியா ஜுரமிருக்கும் பிரதேசங்களில் நமது துருப்புகள் கஷ்டப்படுகின்றனவென்று வருத்தத்துடன் தெரிவிக்கப்பட்டது. நேசநாட்டுத் துருப்புகள் போலவே ஜப்பானியத் துருப்புகளும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்களென்று அனுபவத்தில் வெளியாகுகிறது. சௌகரியமில்லாத அந்நிய நாட்டில் ஏற்படக்கூடிய சிரமங்களை நமது படைகள் சகித்து வருகிறார்களென்பது மெச்சத்தக்கது.

## நேர்முகமான சாக்ஷி.

நமது படைகளின் தீரத்தை அறிவதற்குப் போதுமான சாக்ஷியமிருக்கின்றது. 1943-ம் வருஷம் மார்ச்சுமாதம் 13-ம் தேதியன்று டோரண்டோவில் வெளியாகும் "ஸ்டார்வீக்லி" என்னும் பத்திரிகையில் மிஸ்ட்டர் E. V. லூகாஸ் என்பவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலிருந்து சில குறிப்புகளைப் பிரசுரிக்கிறோம். மிஸ்டர் லூகாஸ் பஸிபிக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் ராணுவ நிருபர். நியூ கினியில் யுத்தம் ஆரம்பமானபொழுது அவர் அங்கிருந்தார். அவர் எழுதுவதாவது: "கோனாவில் ஜப்பானுடைய தற்காப்புகளை நமது துருப்புகள் அடிக்கடி தாக்கின. எதிரிகளின் ஸ்தானங்களுக்கு முன்னால் தங்களுடைய திறமையின் அடையாளங்களை ஏற்படுத்தினார்கள். நல்ல தேகஸ்திதியிலுள்ளவர்களுக்குக் கூட சிரமசாத்யமான காடுகள் மார்க்கமாக நோய்வாய்ப்பட்ட துருப்புகள் ஏழுநாட்கள் வரையில் ஊர்ந்து சென்றன. ஏழுநாட்கள் காடுகளைத்தாண்டி ஜப்பானிய ரோந்துப்படைகளுடன் போர்புரிந்தார்கள். இந்தச் சிப்பாய்கள் கடைசியாக மோர்ஸ்பி துறைமுகத்துக்குத் திரும்பிவந்தார்கள். சிலவாரங்கள் ஒய்வு எடுத்துக்கொண்டு ஆரோக்கியமடைந்த பிறகு அவர்கள் மறுபடியும் முன்னணிக்குச் சென்றார்கள்.

“இந்தச் சண்டையில் இடைவேளையே கிடையாது. மற்ற போர்முனைகளிலில்லாத வண்ணம் இங்கே துருப்புகள் கஷ்டப்பட்டுக்கொண்டு யுத்தத்தை நடத்திவந்தன. இது பயங்கரமான தோற்றமாகயிருந்தது.

“மூன்று மாதங்கள் வரையில் நமது துருப்புகள் மாட்டு இரைச்சியையும் பிஸ்கோத்துகளையும் ஜலத்தையும் சிலசமயங்களில் தேத் தண்ணீரையும் உட்கொண்டு காலம் கழித்து வந்தார்கள். காட்டுப்பிராந்தியத்தில் வசிக்கும் கஷ்டத்தை குறைவான தைரியமுள்ளவர்கள் சகித்திருக்கமாட்டார்கள். ஆனால், ஆஸ்திரேலியப்படைகள் வனாந்திர யுத்தத்தில் நிபுணர்களான ஜப்பானியர்களுடன் அநேகம் யுத்தங்கள் செய்து எல்லாவற்றிலும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

“ஒரு படைப்பகுதியார்கள் பூமிக்குள் சுரங்கம் தோண்டிக்கொண்டு அதன் வழியாகத் தப்பித்துவிடுகிறதென்று தீர்மானித்தார்கள். பெருச்சாளிகளைப்போல ஒன்பது நாட்கள் வரையில் அவர்கள் பூமியைக்குடைந்து சென்றார்கள். ஐந்துநாட்களில் அவர்களுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. ஒன்பதாவது நாள் அவர்கள் 500 கஜதூரம் சென்று எதிரியின் வலையைவிட்டு அப்புறப்பட்டுவிட்டார்கள்.

“இந்த சம்பவமானது ஆஸ்திரேலியப் படைகளின் தீரத்தையும் வெற்றிபெறவேண்டுமென்ற ஆர்வத்தையும் நன்றாய் வெளிப்படுத்துகின்றதும் இந்த குணாதிசயங்களினால்தான் ஆஸ்திரேலியர்கள் சரித்திரத்திலேயே வலுவானதும் கடினமானதுமான போர்களில் வெற்றி பெற்றார்களென்றும்” மிஸ்டர் லூகாஸ் சொன்னார்.

---

## ஜப்பானின் வலிமை குன்றி வருகிறது.

### உண்மையை ஜனங்கள் அறியவில்லை.

நியூயார்க், ஏப்ரல் 24.

டோக்கியோவில் அயல் நாட்டு தூதர்களின் காரியாலயத்தைச் சேர்ந்தவரும் ஆர்ஜன்டைன் பத்திராதிபருமான ஸீனர் ராமன் லவால் என்பவர் “ஜப்பானுக்கு இருந்த நம்பிக்கையானது பயங்காளித்தனமாக மாறிவிட்டது” என்று ஜனங்களுக்கு ஒலிபரப்பினார்.

“100 வருஷங்கள் யுத்தம் நடத்துவதற்கு ஜனங்கள் தயாராகயிருக்கவேண்டுமென்று ஜப்பானிய அரசாங்கம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஆகையால் மகத்தான கஷ்டங்களையும் அனுபவிக்க அவர்கள் தயராக இருக்கிறார்கள். யுத்தத்துக்கு முன் ஜப்பானிய ஜனங்கள் அமைதியுள்ளவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவுமிருந்தார்கள். இவையெல்லாம் இப்பொழுது மாறிவிட்டன. கவர்ன்மெண்டார் ரொம்பவும் சங்கடப்படுகிறார்கள். அவர்கள் அதிகார தோரணையில் கருணை முதலிய நற்குணங்களைப்பற்றி பிரசாரம் செய்து வருகிறார்கள். அந்தரங்கமாக ஒரு சங்கமானது வேலை செய்து வருகிறது. இதில் நாட்டிலுள்ள அநேக பிரமுகர்கள் சேர்ந்து இருக்கிறார்கள்.

யுத்த ஆரம்பத்தில் ஜப்பானியர்கள் ஜெர்மானியர்களைக் கௌரவமாக மதித்து வந்தார்கள். ஜெர்மனியின் நிலைமை இப்பொழுது மோசமாகிவருவதால் ஜப்பானியர்கள் தங்களுடைய அந்தரங்க அபிப்பிராயத்தை வெளிக்காட்டுகிறார்கள். ஜப்பானியர்களுக்கு மேலதிகாரியாக இருந்த ஜெர்மன் டெக்னிஷியன்களை இப்பொழுது ஜப்பானியர்கள் மதிக்கிறார்களில்லை.

#### அமெரிக்க வெற்றிகள்.

அமெரிக்க வெற்றிகளைப்பற்றி ஜப்பானில் பிரஸ்தாபிப்பதே கிடையாது. நான் ஜப்பானிய பாஷை பேசுவதால் எனக்கு இது தெரியும். எல்லா விதமான தகவல்களும் அரசாங்கத்தின் காரியாலயத்திலிருந்து வெளிவர வேண்டியதால், ஜப்பானிய மக்களுக்கு வாஸ்தவமான நிலைமை புலப்படுவதில்லை. ஆனால் ஜப்பானிய அதிகார வர்க்கத்தாருக்கு உண்மை விளங்கும். ஸாலமன்ஸில் அமெரிக்கர்கள் முன்னேறியதைக்கேட்டு அவர்கள் மிகவும் வியப்புற்றார்கள். ஜப்பான் தோல்வியுற்றதென்று இன்றும் ஜனங்களுக்குத் தெரியாது. குடால்கனாரை நாம் கைப்பற்றியதிலிருந்து ஜப்பானுக்கு மகத்தான தோல்வி ஏற்பட்டதென்று நினைக்கிறேன். இந்த வெற்றியின் முக்கியத்வத்தை அமெரிக்கர்கள் அறிகிறார்களோ என்று நான் சந்தேகிக்கிறேன். இந்தத் தோல்வியானது ஜப்பானுடைய நம்பிக்கையை முறியடித்தது. திட்டங்களை மாற்றி ஆஸ்திரேலியாவைத் தாக்குவது என்ற

வேறு திட்டம் போடப்பட்டது. ஸாலமன்ஸில் அமெரிக்கப்படை முதல் முதலில் இறங்கிய பொழுது அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த சிலர் ஸாலமன்ஸ் தீவுகளுக்குள் ஒரு இடத்தை பிடித்துக்கொண்டு சமாளித்து வருகிறுர்களென்று ஜப்பான் வெளியிட்டது. இரண்டாவது சண்டையைப்பற்றிச் சொல்லும்பொழுது அமெரிக்கப் படைகளை கூடிய சீக்கிரம் நாம் அழித்துவிடுவோமென்று ஜப்பானிய அரசாங்கம் வெளியிட்டது. எந்த நேரத்திலும் ஜப்பானுக்குப் பெரிய வெற்றி ஏற்படுமென்று ஜனங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ஸாலமன்ஸ் தீவுகளை திரும்பிப் பிடித்து ஆஸ்திரேலியாவைத் தாக்குவதின் மூலம் யுத்த ஆரம்பத்தின் முதல் வருஷ விழாவைக் கொண்டாடுவதென்று ஜப்பான் உத்தேசித்திருந்தது.

அமளி.

ஒரு ஜப்பானியச் சண்டைக் கப்பல் மூழ்கிவிட்டதென்றும் மற்றென்று பழுதுபட்டதென்றும் விளம்பரம் செய்தபொழுது ஜப்பானில் அமளி ஏற்பட்டது. கடற்படை பத்திரிகை நிலயத்திலிருந்த ஒரு ஜப்பானிய உத்தியோகஸ்தர் பின்வருமாறு சொன்னர்: "பெர்ல் துறைமுக யுத்தத்துக்கு முன் அமெரிக்கக் கடற்படையின் வலிமையை நாம் அதிகமாக மதித்தோம். மிட்வே தீவுகள் யுத்தத்துக்குப் பின் நாம் குறைத்து மதித்துவிட்டோமென்று தெரியவருகிறது.

ஜப்பானுக்குக் கடற்படை பலம்தான் குறைச்சல். கப்பல் நஷ்டங்களைக்கண்டு ஜப்பானிய அதிகாரிகள் மனம் கலங்குகிறுர்கள். கடற்படையைச் சேர்ந்த இலாகா மூலமாக எனக்கு கிடைத்த தகவல்களிலிருந்து இந்த யுத்தத்தில் ஜப்பானுக்கு $1\frac{1}{2}$ மிலியன் எடைமானமுள்ள கப்பல்கள் நஷ்டமாகியிருக்கின்றன என்று தெரியவருகிறது. மற்றொரு கடற்படை அதிகாரி என்னிடம் சொன்னதாவது "ஜப்பானின் கடற்படை நிலைமை மோசமாகயிருக்கிறது. ஜப்பானுடைய லாபங்களை பலப்படுத்துவதற்கு ஜப்பானுக்குக் கடற்படைதான் அவசியம். இந்த பிரச்னை தீராவிடில் ஜப்பான் தோல்வியடையுமென்பது நிச்சயம்".

---

## ஜப்பானின் கிலி அதிகரிக்கிறது.

### (தூரக்கிழக்கு நியூஸ் லெட்டர்).

அயல் நாட்டுக் காரியாலத்தின் தலைவரான ஹோரி என்பவர் ஏப்ரல் மாதம் 12-ம் தேதி யன்று டோக்கியோவில் பத்திரிகை நிருபர்களிடம் கிழக்கு ஆசியாவிலுள்ள ஜப்பானிய போர் ஸ்தானங்கள் வலுவாக யிருக்கின்றனவென்று வெளியிட்டபோதிலும் அன்றையதினம் மாகாணுதிபதிகளின கூட்டத்தில் டோஜோ சொற்பொழிவு செய்த தோரணையையும் டோக்கியோவிலும் மற்ற இடங்களிலும் மகாநாடுகள் இடைவிடாது நடைபெறுவதையும் கவனித்தால், வரப்போகும் யுத்த நிகழ்ச்சிகளைப் பற்றிய கவலை ஜப்பானுக்கு அதிகரித்திருக்கிறதென்று சொல்லலாம். மாகாண கவர்னர்கள் முன்னிலையில் பேசும்பொழுது சக்ரவர்த்தியின் மனப்பான்மையைப்பற்றி தெளிவுறச் சொன்னர். அவர் சொன்னதாவது:—"சென்ற டிசம்பர் மாதம் 12-ம் தேதியன்று இஸிக் கோவிலுக்கு ஆராதனை செய்ய சக்ரவர்த்தி வந்திருந்தார் என்பதில் நாம் நன்றியுள்ளவர்களாகயிருக்கிறேம். அதற்குப் பிறகு இந்த யுத்தத்தைக்கண்டு அவர் மனம் கலங்கியிருக்கிறர்." யுத்த முயற்சிகளை அதிகரிக்க வேண்டுமென்று வற்புறுத்தும்பொழுது கவர்னர்கள் பொருளாதார முறையிலும் மத சம்பந்தமாகவும் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இப்பொழுது தேசத்துக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்தில் திட்டங்களைச்சரிவர நடத்துவதுதான் முக்கியமான காரியமென்றும் டோஜோ சொல்லியிருக்கிறன். ஜனங்களின் மனப்பான்மை உறுதிபெறவேண்டுமென்றும் அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்குமுள்ள சம்பந்தங்கள் பலப்படவேண்டுமென்றும் மன்றடிச் சொல்லிவிட்டு அவன் மேலும் சொன்னதாவது. "யுத்த நிலைமையானது மாறுபாடடையும்பொழுது நம்முடைய திட்டங்களை பாதிக்கக்கூடிய எல்லா விஷயங்களையும் நாம் ஜாக்ரதையுடன் கவனித்து வரவேண்டும். பொதுமக்கள் இந்தச் சங்கடங்களை உல்லாஸத்துடனும் பரஸ்பர அன்புடனும் நிவர்த்தி செய்து வரவேண்டும். ஜனங்கள் தங்களுடைய கவலையையும் அதிருப்தியையும் வெளியிடக்கூடாது."

ஜப்பானுடைய யுத்த முயற்சிகளுக்காக, ஆயுதசாலை யமைக்கவும் தான்யக் களஞ்சியம் ஏற்படுத்தவும் நாங்கிங்கும், சுங்கிங்கும் உதவி செய்யவேண்டுமென்று ஜப்பான் வேண்டிக் கொண்டதற்குப் பிறகு மாகாண கவர்னர்களின் மகாநாடு கூட்டப்பட்டது. இம்மாதிரியான

அநேக பிரச்னைகள் எதிரிகளுக்கு உண்டாகியிருக்கின்றன. மரக்கலம் கட்டுவதற்கும், போக்குவரத்து மார்க்கங்களை அபிவிருத்தி செய்வதற்கும், ஆக்கிரமிப்பு நாடுகளை அதிகமாகக் கொள்ளையடிப்பதற்கும் திட்டம் போட மகாநாடுகள் கூட்டப்பட்டதுமல்லாமல் மத சம்பந்தமாகவும், கலைகள் சம்பந்தமாகவும் மகாநாடுகள் நடைபெறுகின்றன. ஜப்பானிலுள்ள கதோலிக் மதஸ்தரும் சித்ரம் வரைபவர்களும், பல இலாகாக்களில் சாஸ்திர ஆராய்ச்சி செய்கிறவர்களும் இந்தப் பூர்ணமான யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பிரசாரர்கள் எவ்வளவு பீத்திக்கொண்டாலும் டோஜோவும் அவன் பரிவாரங்களும் நடுக்கம் அடைந்துவிட்டார்களென்பது நிச்சயம். ஜப்பானின் புதிய திட்டங்களுக்குக் காரணம், ஸ்டாலின்கிராட்டிலும் எல் அலமீனிலும் ஏற்பட்ட தோல்விகளின் அதிர்ச்சிகளும், இந்துமகா சமுத்ரத்தில் ஜப்பானும், ஜெர்மனியும் ஒன்றுபட்டு ஆதிக்கம் பெறுவது என்று ஆடம்பரமாய்ச் செய்த திட்டம் முறிவுபட்டதும்தான். இந்த திட்டப்படிதான் ஜப்பான் தலைவிரிகோலமாக யுத்தம் செய்ய ஆரம்பித்தது. இந்தத் திட்டத்தின் ஷரத்துகள் ஐரோப்பாவைவிட தூரக்கிழக்கு நாடுகளில் விசேஷமாக பிரசுரம் செய்யப்பட்டன. ருஷ்யாவைத் தாக்குமுன் அநேக மாதங்களாக இந்தத் திட்டமானது பகிரங்கமாகவும் விவாதிக்கப்பட்டது.

சென்ற ஆறுமாதங்களில் இந்தக் கனவு மறைந்துவிட்டது. அதற்குப் பதிலாக ஹிட்லரை முறியடித்தபிறகு நேசநாடுகள் ஒன்றுபட்டு ஜப்பானைத் தாக்கும் என்ற பீதியானது ஜப்பானுக்குத் தோன்றுகிறது. இந்நிலைமையினால்தான் ஜப்பானியர்கள் அடிமைபட்ட ஜனங்களுக்குத் தைரியம் ஊட்ட முன் வந்திருக்கிறார்கள். மௌனத்தை விட்டுவிட்டு இப்பொழுது ஸ்வதந்திரம் அளிப்போம் என்று வாக்குறுதி செய்வதும், இதுவரையில் பொது ஜனங்கள் எதிர்ப்பு செய்துவந்ததை மாற்றி ஜனங்களின் பூர்ணமான ஒத்துழைப்பு இருக்கிறதென்று பறைசாற்றுவதும் நடைபெற்று வருகிறது. இதன் மூலமாக அவர்கள் யுத்த முயற்சிகளில் அதிக பங்கு எடுத்துக்கொள்வதோடு, தங்களுடைய ஐச்வர்யங்களையும் யுத்தத்துக்காகக் கொடுத்துவிடவேண்டுமென்பதுதான் ஜப்பானின் அபிப்பிராயம்.

ஜப்பானியர்களின் கொள்ளையடிப்பும் அபலாபமும் விருத்தியடைந்து வருமானால் ஜனங்களின் மனதில் வெறுப்பு அதிகரித்து ஜப்பானின் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டுமென்ற ஊக்கமும் பலப்படும். உதாரணமாக சைனாவை ஜப்பானியர் ஆக்கிரமித்து ஐந்து வருஷங்களாகியும், அங்கே ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். உணர்ச்சியும் உண்டாகிவிட்டது. வெற்றிபெற்றவர்களால் ஒரு நன்மையும் செய்யமுடியவில்லை. ஒரு விளைவு மட்டும் ஏற்பட்டிருக்கிறது. கொரில்லாப் படைகளின் வெற்றிகரமான தொந்தரவுகள் உண்டாகியிருக்கின்றன.

தேசத்தின் நிலைமையை மதித்துப்பார்க்கும் கருவி யாதெனில் உணவுப் பொருள்களின் நிலைமைதான். இந்தக் கஷ்டம் ஜப்பானிலும் ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலும் ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பஞ்சத்தினால் உண்டாகிய கலகமும், 1918-ம் வருஷ இலையுதிர்கால ஆரம்பத்தில் எதிர்பாராதவண்ணம் ஏற்பட்ட ராணுவ மாறுதலும்தான் மார்ஷல் டெராசியின் விழுக்காட்டிற்கும் ஜப்பானின் பொதுஜன மந்திரி ஸ்தாபிக்கப்பட்டதற்கும் காரணங்கள். வட சைனாவுக்கும் ஜப்பானுக்கும் மஞ்சூரியாவில் தான்யக் களஞ்சியம் ஏற்படுமா. ராணுவ திட்டத்தில் இதுவும் ஒரு முக்கியமான பிரச்னைதான்.

---

## இந்தியாவில் போலிஷ் அகதிக் குழந்தைகள்.

“விளையாடிக் கொண்டிருக்கும் சிறுகுழந்தைகளே வாருங்கள். சிக்கலான பிரச்னைகள் எல்லாம் போய்விட்டன. குழந்தைகளில்லாமல் போனால் இந்த உலகத்தின் கதி என்ன ஆகும். நமது வார்சுகளற்றுப் போவதைக்கண்டு நாம் அஞ்சவேண்டும்.”

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான், நாஸி ஆட்சியின் கொடுமைகளையும் கோரங்களையும் சகிக்கமுடியாது நாட்டை விட்டு ஓடிவந்த நூற்றுக்கணக்கான போலிஷ் குழங்கைளுக்கு இந்தியா ஆதரவளித்து வருகிறது. நமது நாட்டில் அவர்கள் சுகமாகவும், சந்தோஷமாகவும், சிலமாதங்களுக்கு முன் அவர்கள் அனுபவித்த கஷ்டங்களை மறந்துமிருந்து வருகிறார்கள். குழந்தைகள் தேசிய உடைகளை அணிந்து கொண்டு குதூகலத்துடன் தங்கள் நாட்டு கீதங்களைப்பாடுவதும் கூத்தாடுவதுமாக யிருப்பதைப் பார்த்தால், இவர்கள்

இராக்கில் ஒரு முகாமுக்கு வந்தபொழுது "நாங்கள் இங்கேயே தங்கி விடுகிறோம். இங்கே போதுமான ஆஹார வசதிகளிருக்கின்றன" என்று அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லுவது நம்பத்தகாததாகயிருக்கிறது.

இரண்டு வருஷ காலமாக அவர்கள் ஆஹாரத்துக்குக் கஷ்டப்பட்டார்கள். ஒரு பையனுக்கு தங்கக்கட்டி ஒன்று அகப்பட்டதாம். பணமில்லாதவனுக்கு ஐச்வர்ய பிராப்தி ஏற்பட்டது. ஆனால் பிரயோஜனமில்லை. காசு கொடுத்தாலும் ரொட்டி அகப்படவில்லை. ஆகையால் அச்சிறுவன் தங்கக்கட்டியை எறிந்துவிட்டான்.

பத்திரமாக வெளியேறுவதற்குத் தெற்கு நோக்கி அவர்கள் சென்றபொழுது குழந்தைகளுக்கு மிகுதியான சிரமங்கள் ஏற்பட்டன. குழந்தைகளின் தாய்தந்தைகள் அவர்களுக்கு வழிகாட்டி ஆச்வாசப்படுத்தினார்கள். சுரம் உண்டாகிற்று. தாய் தகப்பன்மார்கள் நூற்றுக் கணக்காக இறந்தார்கள். இந்த ஜுரம் குழந்தைகளைவிட யுவர்களைத்தான் பாதிக்கும்.

இரண்டு குடும்பங்களின் கதையைச் சொல்லுகிறேன். ஒரு குடும்பத்தில் தாய், தகப்பன் இருவரும் உயிர் துறந்தார்கள். 7-வயதுப் பையனும் அவனுடைய இளைய சகோதரியும்தான் பாக்கிப்பட்டார்கள். பெண் குழந்தைக்கு 18 மாதம்தான் ஆகிற்று. பெண் குழந்தையைக் காப்பாற்றும்வேலையில் 7 வயதுப் பையன் பொறுப்பெடுத்துக்கொண்டானென்பது ஆச்சரியம். இந்தியாவுக்கு அனுப்புவதற்காகப் போலிஷ் குழந்தைகளை லாரிகளில் ஏற்றிச் செல்லுகிறார்களென்று அச்சிறுவன் கேள்விப்பட்டான். அவன் ஒரு முடிவுக்கு வந்தான். தன்னுடைய சகோதரியை முதுகில் கட்டிக்கொண்டு கால்நடையாக பனி உறைந்த பிரதேசங்களின் மார்க்கமாக வெகு தூரத்தில் லாரிகள் இருக்குமிடத்திற்குப் பிரயாணமானான். ரொம்பவும் ஆயாசத்தின் பேரில் வெற்றிகரமாக அவன் அவ்விடம் போய்ச் சேர்ந்துவிட்டான்.

"நாங்கள் இந்தியாவுக்குப் போகவேண்டும், ஐயா" என்று சொன்னான்.

அச்சிறுவனும் குழந்தையும் இப்பொழுது உதகமண்டலத்தின் அகதிகளின் முகாமில் இன்னும் மூன்று நான்கு குழந்தைகளுடன் வசித்து வருகிறார்கள். இவர்களை ரக்ஷித்து வருகிறவர் ஒரு மாது. குழந்தைகளை பரிபாலிப்பதில் அனுபவம் வாய்ந்தவள். அவள் கடைசியாக அனுப்பிய ரிபோர்ட்டில் குழந்தைகள் நன்றாகயிருக்கின்றன என்று எழுதியிருக்கிறாள்.

## அரசர்களிடமிருந்தும், மாகாணங்களிலிருந்தும் பேருதவி.

மற்றொரு குடும்பத்தில் தாயும் மூன்று குழந்தைகளுமிருந்தன. அவள் கருத்தரித்திருந்தாள். தாயாருக்கு ஜுரம் வந்தபொழுது, அகாலத்தில் ஒரு பெண் குழந்தை ஜனித்தது. அதற்கு இப்பொழுது $2\frac{1}{2}$ வயது ஆகிலும் அது மூன்று அல்லது நான்கு மாதங்களான சாதாரணக் குழந்தை மாதிரிதானிருக்கிறது. அது நடக்கவில்லை, பேசவில்லை. தலைபாகம் மட்டும் பெருத்திருக்கிறது. ஆகிலும் முகாமிலுள்ள யாவரும் இந்தக் குழந்தையை பரிபாலித்து முன்னுக்குக்கொண்டு வருவதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா தர்மத்துக்குப் பேர்போனது. போலிஷ் ஜனங்கள் வந்திருக்கிறார்கள். மாக்ஷி தங்கிய நவ நகர் மஹாராஜாவான ஜாம் சாகேப் இரண்டு முகாம்களுக்கு வேண்டிய பூமியை தானம் செய்திருக்கிறார். ஸமஸ்தானத்தில் பாலச்சாடி என்னுமிடத்திலுள்ள முகாமுக்கு மகாராணியாரும் அடிக்கடி விஜயம் செய்வதுண்டு. ஹைதராபாத் ஸமஸ்தானத்தின் மாக்ஷிதங்கிய நிஜாம் அவர்கள் 50 குழந்தைகளின் போஷணைக்கு வேண்டிய பொருள் அளித்திருக்கிறார். போபால், கச்சு, குவாலியர், ஜோட்பூர், போர்பந்தர் முதலிய ஸமஸ்தானங்களின் அரசர்கள் ஒவ்வொருவரும் 10,000 ரூபாய்கள் வீதம் நன்கொடை அளித்திருக்கிறார்கள். மாகாணங்களில், மதராஸ் மாகாணம் 80 குழந்தைகளைப் பரிபாலனம் செய்வதற்கும், பஞ்சாப் 55 குழந்தைகளுக்கும், ஒரிஸ்ஸா, 15 குழந்தைகளின் போஷணைக்கும் பொருளுதவி செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

6,000-க்கணக்கான அனாதைக் குழந்தைகளுக்கும், ஸ்திரீகளும் குழந்தைகளும், ராணுவத்துக்கு லாயக்கில்லாத மனிதர்களும் கொண்ட 5,000 போலிஷ் ஜனங்களுக்கும் இந்தியா ரக்ஷணை செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. முதலில்வந்த 500 குழந்தைகள் இந்தியாவின் விருந்தாளிகளாகக் கருதப்பட்டு, அவர்களின் போஷணைச்செலவு தர்ம நிதியிலிருந்து கொடுக்கப்படும். இப்பேர்ப்பட்ட பெரிய குடும்பத்துக்குத் தேவையான முகாம்களை ஏற்படுத்தி அவைகளில் வசதியேற்படுத்துவதும், கல்வியும் வைத்திய வசதியும் அமைப்பதும்,

ஆரோக்கிய அபிவிருத்தி செய்வதும், பழைய கஷ்டங்களை மறக்கும்படி செய்வதும், சிரமமான காரியம். ஆகிலும் இந்த சேவையில் ஈடுபட்டவர்கள் உத்சாகத்துடன் வேலைசெய்து வருகிறார்கள். சாவும் அழிவும் மிகுதியாக இருக்கும் இந்நாளில் சிறு குழந்தைகளைக் காப்பாற்றி, போஷணை செய்து வரப்போகும் உலக அமைப்பில் அவர்கள் ஒரு சிறந்த பங்கு எடுத்துக் கொள்ளும்படியாகச் செய்யப்படுகிறதென்பது சிலாக்கியமான முறை.

## இந்தியாவுக்கு போலிஷ் அரசாங்கம் நன்றிசெலுத்துகிறது.

சுங்கிங்கில் போலிஷ் அரசாங்கத்தின் அயல்நாட்டு தூதராக நியமிக்கப்பட்ட மாக்ஷி தங்கிய ஆல்பிரட் பானின்ஸ்கி என்ற பிரபும் அவர் மனைவியாரும் தங்கள் உத்தியோகத்திற்குப் போகும்பொழுது இந்தியா மார்க்கமாகச் சென்றார்கள். மேன்மை தங்கிய வைஸ்ராயுடனும் வைஸ்ராணியுடனும் தங்கியிருந்தார்கள். போலிஷ் அகதிகளுக்கு இந்தியா செய்து வரும் பேருதவிக்காக போலிஷ் அரசாங்கம் வந்தனோபசாரம் செய்வதாகவும் நன்றி அறிவிப்பதாகவும் அவர் வைஸ்ராயுக்கு ஒரு செய்தியனுப்பியிருக்கிறார்.

இந்தியாவில் போலிஷ் அகதிகளுக்கு மூன்று பெரிய முகாம்களிருக்கின்றன. கராச்சிக்கு சமீபத்தில் ஒன்றும், ஜாம்னகரில் அகதிக்குழந்தைகள் முகாம் ஒன்றும், இருக்கின்றன. மூன்றாவது, இந்தியா பூராவும் பலான இடங்களில் வசித்து வருகிறவர்களும், முக்கியமாக பம்பாய் நகரத்தில் வசிப்பவர்களுமானவர்கள்.

ஸ்திரீகளும், குழந்தைகளும் கொண்ட அகதிகளின் கோஷ்டி இந்தியாவுக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கோல்ஹாபூர் ஸமஸ்தானத்தின் தர்பார் அவர்களின் ஆதரவில் அங்கே ஒரு புதிய முகாம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

போலிஷ் அகதிகளுக்கு இந்தியா செய்து வரும் வரவேற்பையும் பொருளுதவியையும் பாராட்டி போலிஷ் அரசாங்கத்தின் சார்பில் ஆல்பிரட் பானின்ஸ்கி இந்தியாவுக்கு வந்தனம் செலுத்தியிருக்கிறார்.

---

# கதம்பம்.

## கிழக்கு திசைக் கழுகுகள்.

சவங்களைக் கொத்தித்தின்பதில் கழுகுகளுக்கு ஆசையிருப்பது போல் ஜப்பானியர்களும் மனிதர்களைக் கொள்ளையடிக்கிறார்கள். இருவருக்குமுள்ள வித்தியாசம் யாதெனில், உணவுப் பொருள்களை மட்டும் கழுகுகள் ஸ்வீகரிப்பது. ஜப்பானியர்கள் எல்லாச் சொத்துக்களையும் பறி முதல் செய்கிறார்கள். அவர்களுக்குத் தங்கம், பணம், முதலியவற்றிலும் அதிக ஆசை உண்டு. ஷ்வீபோஜில்லாவிலுள்ள கிராமங்களில் ஜப்பானியர்கள் வீடு வீடாக நுழைந்து பொருமானமுள்ள பண்டங்களைக் கைப்பற்ற முயன்றதை நான் பார்த்தேன். அவர்கள் கடியாரங்களையும், தட்டுகளையும், வெள்ளி சாமான்களையும், செருப்புகளையும் அபகரித்துச் சென்றார்கள். தங்கமும், பணமும் அகப்படாவிட்டால் வைக்கோல் போருக்குச்சென்று அங்கே பூமியைத் தோண்டிப்பார்ப்பது வழக்கம். குடியானவர்கள் தங்கள் ஐச்வர்யங்களை பூமியில் புதைத்து வைப்பது வழக்கம். இதையறிந்து ஜப்பானியர்கள் அவைகளைக் கைப்பற்றி விடுவார்கள். [கிடாபிஸ்டான் பிரசுரம் செய்ததும் தெயின்பே இயற்றியதுமான "பர்மாவில் நடப்பு" என்ற புஸ்தகத்தில் எழுதப்பட்டது].

## ஜெர்மன் பிரசார மந்திரியின் நினைவுகள்.

"முன் வைத்த காலைப் பின்வாங்கக்கூடாது. வருங்காலம் எவ்விதமிருக்குமென்று அரசாங்கத்தார் மதிக்க முடியாது. ராணுவ நிலைமையைப்பற்றிச் சொல்லும்பொழுது நாம் பட்டவர்த்தனமான ரிபோர்ட்டுகளை வெளியிட்டு வருகிறோம். சென்ற யுத்தத்தில் நாம் போட்ட வேஷமெல்லாம் இப்பொழுது பலிக்காது. இன்று நாம் இருப்பதா அல்லது இறப்பதா என்ற பிரச்னை நம்மைப் பாதித்து வருகிறது. தேசங்களுக்கு அதிர்ஷ்டம் என்பது எதிர்பாராத வண்ணம் வந்துவிடுமென்று சரித்திர பூர்வமாக நாம் அறிகிறோம். இடையூறுகளை லக்ஷியம் செய்யாமல் நாம் நம்முடைய முயற்சிகளைச் செய்துவரவேண்டும்.

[ஸைகோன் ஒலிபரப்பில் டாக்டர் கோயபல்ஸ் எழுதிய வியாசத்தை ஒலிபரப்பியது. ஏப்ரல்—17].

## வீட்டிலும் ஆபீஸ்களிலும் காகிதச்சிக்கனம்.

**காகிதச்சிக்கனம் மிகவும் முக்கியமானதோர் விஷயம். இங்கு சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.**

1. இரண்டு பக்கங்களிலும் எழுதவும், கூடியவரை சிறியதோர் காகிதத்தில் மிகவும் குறுகிய மார்ஜின்விட்டு எழுதவும்.

2. உபயோகப்படுத்திய உறைகளை கெடுத்துவிடாதே. சிக்கனமாய் வேறொரு சிக்கனத் துண்டுகடுதாசி ஒட்டி அதை திரும்பவும் உபயோகப்படுத்தலாம்.

3. ஒரு பக்கம் மட்டும் எழுதிய காகிதத்தை எறிந்துவிடாதே. மற்ற பக்கத்தை குறிப்புகள் குறிக்கவோ, வேறு ஏதாவது எழுதவோ அல்லது கவர்களின்மேல் சிக்கனக் கடுதாசி துண்டு ஒட்டவோ உபயோகப்படுத்தலாம்.

4. முடிவாக, உன்னுடைய சொல்லான "காகிதத்தை வீணாக்காதே" என்பதை சரிவர பயன்படுத்துவதில் இருக்கிறது, உன் அபிமானத்தைப் பெறுவது என்பது உன் குடும்பத்தினருக்கும், உன் வேலையாள்களுக்கும் தெரிந்திருக்கட்டும்.

நீ ஒரு தொழிலாளியாக இருந்தால் :—

1. யுத்த காலத்தில் உண்மையிலேயே அவசியமற்ற அறிக்கைகள், விளம்பரங்கள் முதலியவைகளை அச்சடித்து வெளியிடுவதை நிறுத்து. அம்மாதிரி பல விளம்பரங்கள் ஒருவராலும் வாசிக்கப்படுவதேயில்லை.

2. அனாவசியமான ஒத்துக்கொள்ளும் காகிதங்களை நிறுத்து. இது தபால் செலவையும், தபாலாபீஸில் ஏற்படும் காகிதக் குவியல்களையும் குறைக்கும்.

3. சில மை சொட்டுகள்பட்டிருப்பதால் நல்ல மை ஒட்டும் காகிதங்களை வீணாய் தூக்கி எறிந்துவிட அனுமதிக்காதே.

4. உன் குமாஸ்தாக்கள் எல்லாம் உன் உத்தரவின்படி நடக்கிறார்களா என்று உனக்கு எவ்வாறு தெரியும். நீயே போய் நேரில் கவனிக்கவேண்டும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 145. (4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 8- 5-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 9- 5-43 | நீர்ப்பழனி | ... ,, | 7.00 |
| ,, | ஆலூர் | ... ,, | 7.30 |
| 10- 5-43 | காரையூர் | ... ,, | 7.00 |
| ,, | இடையாத்தூர் | ... ,, | 7.30 |
| 11- 5-43 | வடவாளம் | ... மாலை | 7.00 |
| ,, | செம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 |
| 12- 5-43 | நார்த்தாமலை | ... ,, | 7.00 |
| ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| 14- 5-43 | கொன்னையூர் | ... ,, | 7.00 |
| ,, | மேலவேகுப்பட்டி | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 146. (5-வது பிரிவு.)

| | | | |
|---|---|---|---|
| 15- 5-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 16- 5-43 | திருவரங்குளம் | ... ,, | 7.00 |
| ,, | வம்பன் | ... ,, | 7.30 |
| 17- 5-43 | திருமயம் | ... ,, | 7.00 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 |
| 18- 5-43 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 |
| 19- 5-43 | பொ. புதுப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |
| 20- 5-43 | வெள்ளனூர் | ... ,, | 7.00 |
| ,, | செம்பாட்டூர் | ... ,, | 7.30 |
| 21- 5-43 | புலியூர் | ... ,, | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 8— 5—43 | பொன்னமராவதி. |
| 9— 5—43 | விராச்சிலை. |
| 10— 5—43 | விராலிமலை. |
| 11— 5—43 | வடகாடு. |
| 12— 5—43 | கீழாநிலை புதுப்பட்டி. |
| 13— 5—43 | ஆலங்குடி. |
| 15— 5—43 | திருமயம். |
| 16— 5—43 | தீத்தான்விடுதி. |
| 17— 5—43 | அரிமளம். |
| 18— 5—43 | பேராம்பூர். |
| 19— 5—43 | காரம்பக்குடி. |
| 20— 5—43 | கீழாநிலை. |
| 21— 5—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—11-5-43.